உ

திருச்சிற்றம்பலம்.

# தில்லைச்சிவகாமசுந்தரிசதகம்.

இஃது,

நாகைப்பட்டணத்தைச்சார்ந்த கிராமத்து மேட்டிலிருக்கும்

குருலிங்க ஜங்கம பத்தியிற் சிறந்த

**ஐயாத்துரைஞானியாரவர்களால்**

இயற்றப்பட்டு,

புதுவை,

**தியாகராய முதலியா ரவர்களும்**

வேலூர்,

**இராமகிருஷ்ணமுதலியா ரவர்களும்**

கேட்டுக்கொண்டபடிக்கு,

மஹீசுர அக்கிரார மென்கிற மோகூரில் வாசஞ்செய்யும்

ஸ்ரீ - குரு - வாதூல

**சுப்பிரமண்ணிய பட்டாசாரியார்**

முன்னிலையில்

**மு. துரைசாமிக்கவிராயர்**

அவர்களால் பார்வை யிடப்பட்டு,

---

முத்தியாலுபேட்டையி லிருக்கும்

ஏஷியாடிக் பிரஸென்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பட்டது.

---

கலியுகாதி௵ சதகாசூஎ௱ - நிகழாநின்ற

குரோதன௵ கார்த்திகைமீ கடுவ.

# பிழை திருத்தல்.

| பக்கம். | வரி, | பிழை, | திருத்தம், |
|---|---|---|---|
| ௮ | ௧௭ | நமுவவிடி | நழுவவிடி |
| ௯ | ௩௯ | கன்ன | கள்ள |
| ௧௪ | ௧௯ | பதினென் | பதினெண் |
| ஷ | ௨௫ | கித்தி | சித்தி |

பிழை திருத்தல் - முற்றுப்பெற்றது.

---


## விளம்பரம்.

இந்த அற்புத தோத்திரமாகிய சதகம் வேண்டியவர்கள் இப்போது சிதம்பரத்தில் வாசஞ்செய்யும் - வே-இராமகிருஷ்ண முதலியாரவர்களிடத்திலும் சென்னபட்டணம் கவுண்டாண்டு செனல் ஆபீசில் உத்தியோகமாயிருக்கும் + ஒப்புஷாப்பு - குமரப்பமுதலியார் குமாரர்-அப்பாசாமி முதலியாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.



அ. அப்பாசாமி முதலியார்.

உ

சிவமயம்.

வெற்றிவே லுற்ற துணை.

---

சிவராஜ்தானி யென்னுங் - கடனுகைக்

# கிருஷ்ணசுவாமி உபாத்தியாயர்

இயற்றியது.

---

## சிறப்புப் பாயிரம்.

### நேரிசை ஆசிரியப்பா.

கங்கையேயாதி கதிதருதீர்த்தச் - சங்கமமொவ்வொரு தனிப்பலனருளி ... *
வீறுபெற்றோங்கி மேன்மைகடாங்கு - நாறுதொத்தலர்ந்த நறுஞ்சண்பகக்கா ...*
விடையொருகலையுள வெண்ணிருகலைமதி - மடநடைமடவார் வதனத்தைமானத்*
துயிலுறுங்கலையைப் பயிலொளிக்கரத்தான் - மெல்லெனத்தடவும் விளையாட்டொ
ருபான், மல்லலம்புவனம் வளந்தருமுகிற்குல - மெம்பிரான்சென்னியி லிருந்தமந்
தாகினி, வெம்படியாரிரு வினைப்பிணிவிலக்கிச் - சிவசாயுச்சியச் செல்வத்தழுத்த
நவமாரருட்கர நாடியவழித்தாய்க் - குஞ்சிதபாதக் கொழுந்திருவளாவி ... *
வஞ்சமில்வசுந்தரா மலர்க்கரத்தமர்ந்து - பரவியவடியார் பவப்பிணிமாற்றி ...*
வரமிகவருளி மாருச்சீருந் - தந்துளந்தழைக்குந் தனிச்சிவகங்கையு ... ... *
நந்தணிமரீஇப்பொன் னுவாய்திரியுங் - கடலெனவயிர்த்துப் படர்ந்துவந்திறங்கி*
நசையறப்புனலுன் டிசையெழீஇயுயர்ந்து - செல்லாறொருவி நல்லார்தமைப்போ
ல், சினகரத்துயர்ந்து மனநிலைகடந்துமீ - யுறழ்தருகோபுரங் களினுமொளிவிடு *
பொற்சபைகளினும் பொலியுமண்டபத்தும் - படிந்துமெய்ச்சிவபோ கத்தினிற்ப
டிந்தச், சிவபோதமேலிட் டவாவொரீஇகீனா - யுமிழாதென்று மமர்வபோலெழி
ல்செயுந், தில்லையம்பதி யெல்லைகள்கடந்த - மாதவரிருவர்கண் மனங்களிதுளு
ம்பத், திருநட்டமாடிய தேவதேவன் - வருமட்டமூர்த்தமாம் வள்ளன்மகேசன் *
மூவாயிரமா முனிவர்பூசிக்கு - மூவாமுதல்வன் முகினிறக்கடவுளும் ... ... *
அனவாகனத்தனு மனவரதம்பணி - மனவாக்கெட்டா மதியணிசடிலப் ... *
பெருந்தகையாதிப் பெருமான்சபேசன் - மருந்தெனப்பாக மருவியேயென்றும்*
பிரியாதமரும் பிராட்டிசீமாட்டி - கரியானனனைக் கந்தனையளித்த ... ... *
தற்பரானந்தி சச்சிதானந்தி - சிற்பரிபராபரி சிதம்பரிதராதரி... ... ... ...*
வாமாபிராமி மகிழ்சிவகாமி - நாமாவளியை நயந்தொருசதகஞ்... ... ... *
சிவராஜதானி யெனச்சீர்படைத்த - தவராஜர்போற்றுந் தனிக்கடனுகையின் ...*

றென்பாலோங்கிச் செழித்தறந்தாங்கி - யன்பாரடியா ரகங்களிதூங்கி ... *
யமர்ந்தெழிறுன்னி யணிகொடிருப்பதி - சமன்றனையோட்டித் தழைக்கும்பெரும்
பதி, கிராமத்துமேடெனக் கீர்த்திமெய்மிகும் - பிராமத்துயரும் பிரபலமூதூர் *
தன்னின்மேழிப்ப தாகையையுடையான்-வன்னவண்குவளை மாலையையுடையான்
காராளகுலதில கன்சிவனடியார்க் - கேராளமாயன மீந்துவந்திடுவோன் ... *
தில்லையந்தணர்க்குஞ் செறிசபேசனுக்கு - மெல்லையில்முது மெழிலபிடேகமும் *
பூசைநைவேத்யமும் பொருவில்கட்டளையாய்ச் - செய்வதுமன்றிமேற் சேர்ந்திடு
தனங்களும், வையகமதிற்சிவார்ப் பணமெனவகுத்தும்-வருபவன்சிதம்பர வள்ள
லுங்கமலையாங், கருணைகூர்பெயருள கற்புக்கரசியுஞ் - செய்யுநற்றவங்கள் சிறக்க
வந்துதித்தோன், துய்யமெய்ஞ்ஞான சுந்தரமுடையோன் - மெய்யாத்துறைமகிழ்
வித்ரணமேவு, மையாத்துறைமா வணிபெறச்செய்து-மகிழுங்குரோதன வருடசித்
திரைமதி, யகமகிழிருபத் தைந்தாந்திகதி - சுக்கிரவார சுதினமதனிலே ... ... *
முக்கணக்கற்கு மூலட்டானச் - சிவகுறிதனக்குஞ் சிவகாமித்தாய்க்கும் ... *
நவமுறுநிருத்த நாதநாயகற்குஞ் - சுற்றுறுசினகர சுயஞ்சோதிகட்கு ... ... *
மிருமபிடேகநை வேத்தியம்விதித்துந் - தரும்பாவாடைக ட‌னித்தனிசெய்வித் *
திருமூவாயிர ரியன்மறைமுழக்க - வருமைசேர்சநிதிமி னருட்பாலருந்தி ... *
யேப்பமிட்டதுபோ லிருந்தரங்கேற்றிக் - காப்பியமுணர்ந்தோர் களித்தகமகிழப்
பெற்றன னென்றும்பிறங்கி - நற்றவர்மெச்ச நாளும்வாழியவே ... ... ... *

---

இ ஃ து,

திருப்போரூர்ச்சிவசுப்பிரமணியர் வரப்பிரசாதராயும்

காஞ்சீபுரம் வித்வான்

சபாபதிமுதலியாரவர்கள் மாணக்கராகிய

புரசை - அஷ்டாவதானம்

## சபாபதிமுதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

நிலமண்டில ஆசிரியப்பா.

திருத்தகுதமிழ்க்கடல் திளைத்ததனுழத் - துருத்தகுநுண்பொரு ளெனவுட்
பொதிந்துள - நன்மணிதேர்ந்தனர் நறைகமழ்ந்தளிசெறி - மென்மலர்த்தொடை
யினும் விழுமியவெனக்கொளீஇ - யுண்மையறிவின் புருவாயெவைக்கும் - அண்
மையுஞ்சேய்மையு மாகித்தன்னை - யறியார்க்கிருளா யறிகுநர்க்கருளாய் - வேத
முமருத்தமும் விளைதருபயனும் - போதவுந்தானெனப் பொருந்தியுமவைக்காங்
குணர்வருநுண்மையா யுற்றவையனைத்தும் - புணர்வுறத்தனதாணை யிற்புலம்பெற
நிறீஇ - யொன்றினையாட்டுவான் றன்னேரசைவி - னன்றியெச்சிறிது மாடாதாக
லி - னுயிரெனும்பாவைக் கொருசுதந்தரமிலை - செயிரறுபாசத் திறமுஞ்சடமாம்-

## சாற்றுகவிகள்.

எனினுமிவற்றை யிசைத்துத்தொழிலறி - வினையனதரலால் யாவுந்தன்செய - லெனுந்தகைமறைபடா தியாண்டுமிருந்து - தனும்பேராடல்கூர் தோன்றாத்துணைக்கொரு - துணையாய்நின்றருள் துரியநிலைப்பு - நணுகாப்பெரும்பர நாதமூலத்தலத்தோங்குபுவீற்றிருந் துறைபராசத்தியைச் - சேல்விழியுமையெனாச் சீர்த்தசுந்தரியெனா - வால்வளைக்கற்பக வல்லியெனாவுல - கம்மையெனாப்பே ரபிராமியெனாஅச்-செம்மைசால்வடிவுடைத் திருத்தேவியெனாஅ - வின்னன்பெயரான் முன்னையஞான்றிற் - குமர்குருவெனுங் குரவன்முதலியோர் - அமிழ்துறழ்பிள்ளைத் தமிழ்முதற்பன்னூல் - பாடிக்களித்தனர் பல்வளங்கெழுமிய - தில்லைச்சிதம்பரத் தொல்பதிமருவுறூஉஞ் - சேமநிதிச்சிவ காமசுந்தரியெனும் - அபிதானத்தா லன்னவர்சொற்ற - நிலைகடைப்பிடித்து நிறைநீருலகம் - புலமைகூர்சொற்சுவை பொருட்சுவைகாணா - வுள்ளம்வியந்தன ருவப்பவோர்சதகம் - தெள்ளுமணிநிரை திரைக்கையாலள்ளி - வாரியளிக்குஞ் சீரியநாகைப் - பட்டினமடுத்துள வட்டவாய்க்கமலந் - தேமதுநல்கிப் பூமருமஞ்சிறை - வண்டினம்பாண்செய வரித்தாங்காங்கு - வெண்சுரிமுகங்கள் விராயொலியிரட்டச் - செஞ்சுடர்வெயிற்கரந் தீண்டியவிழ்ப்ப - மஞ்சுளவிதழ்க்கத வங்களைத்திறவா - மூவருங்கனைகடன் மொய்த்துநீடிருநிலக் - காவலம்பகவன் கருநிறத்திருந்திழை - வந்தினிதிருக்க மாமணிமாளிகை - தந்தியல்தண்ணந் தடஞ்சூழ்கிராம - மேட்டுப்பதியினன் வேளாண்மரபினன் - கூட்டுறுசீல குருலிங்கசங்கம - பத்தியின்மிக்கோன் பார்ப்பதியகலாச்-சித்தமலரிடைத் திகழ்தரக்கொண்டுளான் - வைதீகத்துறை மாண்பமைமுதியோன் - பொய்தீர்திருவே டம்பொருளென்ன - வளையாச்சிவநெறி வள்ளல்ஐயாத்-துரைஞானியன்பு தொடுத்தியம்பினனே ... ... ... ... ... *

---

இஃது,

ஆற்பாக்கம்,

### குமாரசுவாமி ஓதுவார்

இயற்றியது.

---

கட்டளைக்கலித்துறை.

செந்தாமரைத்தடஞ் சூழ்தில்லைவாழ்சிவ காமியெனும் ... *
எந்தாயின்மேற்சத கம்மிசைத்தேயெழி னாகையில்வாழ் ... ... *
நந்தாவருணிறை யையாத்துரையெனா ஞானகதிர் ... ... *
சிந்தாருல்க ரிருணீக்கியேமகிழ் செய்ததுவே ... ... ... *

---

## சாற்றுகவிகள்.

இ ஃ து,

சுவர்க்கபுரத்தாதீனம்

சிவலிங்கசுவாமிகளின்மாணுக்கராகிய

உ ழ லூ ர்,

### திருச்சிற்றம்பலஞானியா ரவர்களால்

இயற்றப்பட்டது.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

சிவமணமுமெய்ஞ்ஞானச் செழுமணமும்வீசுஞ் ... ... *
சித்தாந்தநிகமாந்தச் செல்வமணங்கமழும் ... ... ... *
நவமணஞ்சேரருட்சத்திப் பெருமணமும்பரவும் ... ... *
நவில்சாந்தியாதியிரு நான்மணமுமணக்கும் ... ... ... *
பவமணஞ்சாராதருளுஞ் சிவகாமவல்லி ... ... ... *
பதுமச்செந்தாளிணையிற் பதியுமனத்தெளிவால் ... ... ... *
தவமணஞ்சேர்ந்திலகுமையாத் துரைஞானிபுனையுந் ... ... *
தண்ணருட்செந்தமிழ்ச்சதகத் தனிமாலையிடத்தே ... ... ... *

இ ஃ து,

ஆ-கவி. அரங்கப்பிள்ளை யவர்கள் - குமாரர்

ஆ - முத்தமிழ்க்கவி

### திருவேங்கடப்பிள்ளை யவர்கள்

இயற்றியது.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சதகமெனத் தருமையாத் துரைஞானி யாரித் ... ... *
தண்டில்லைச் சிவகாம சுந்தரி செந்தாளிற் ... ... ... *
சதகஞ்சூட் டியதறிந்து சீதரனு ரணையச் ... ... *
சாதகத்திற் கிவன்றக்கோ னென்னவுமீ ளாந்து ... ... *
சதகமசைத் தேத்தினனுர் கவிகைக் கொண்ட ... ... *
தவன்பொதிகைத் தலமுடைத்தாய்த் தயங்கியதின் மேன்மெய்ச் ... *
சதகமனத் தாணுகித் தவமுயன்றுச் சரிக்கத்... ... ... *
தானின் முலெம்மானு மென்புகல லாமே ... ... ... *

# சாற்றுகவிகள்.

இஃது,
நாகையில் வசிக்கும்
திருக்கோண மலைத்தாரு
**விரு. நாராயண செட்டியார்**
இயற்றியகவிகள்.

---

அறுசீர்க்கழிநெடில்.

அருந்தவர்க டினம்பரவும் புலிசைநட ராசனுளத் தணியாயோங்கும் ... *
திருந்துமெழிற் சிவகாம சுந்தரிபொற் சதகமருட் டிறத்தினீந்தான் .... .. *
பொருந்துபுகழ்க் கிராமத்து மேடெனுமா வளம்பதியான் புலவர்க்கென்றும் [னே
விருந்தனையான் சிதம்பரமா லீன்றவையாத் துரைப்பெயர்கொண் மேன்மையோ

இதுவுமது.

தந்தைசெய்த தவப்பயனே தாய்செய்வி ரதப்பலனே சகங்களுய்ய .. *
பந்ததில்லைச் சிவகாம சுந்தரிமேற் சதகமொன்று வழுத்தினனால் ... ... *
செந்தமிழ்நா கைக்கிரா மத்துமே டெனவோங்குந் திருவாரூரான் ... *
பந்தமற நோற்றுயரா யாத்துரைத்தே சிகனெனுமெய்ப் பண்புளோனே (உ)

---

இஃது,
வேதாந்த சாஸ்திர சம்பன்ன ராகிய
பேறை - திருஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள்
மாணாக்கர்களிலொருவராகிய
**அ. அப்பாசாமி முதலியா ரவர்கள்**
பாடிய கவிகள்.

---

நேரிசையாசிரியப்பா,

சீர்வளர்பங்கயச் செல்விவாழ்மார்பனு - மேர்வளர்நாமகட் கிறைவனுஞ் சசிதன் - கணவனேடேனைய கடவுளர்பதினெண் - கணத்தருஞ்சூழ்ந்து தனப்பருமன்புகொண் - டெங்கணுமீண்டி யேத்திடமரவொலி - பொங்கோதவொலியொடு போர்செய்தொலிப்ப - நந்தூரலைவாய் நவமணிகொழிக்குஞ் - செந்தூர் மேவிவாழ் தேவதேவனே - விண்ணவர்சிறையினை மீட்டப்ரதாபனே - மணிகொழித்திழிந்திடு மருவிமருவு - மணிதிருத்தணிகைமால் வரையமர்ந்துறைதரு - மெந்தாயெந்தையை யென்பெருங்குரவனே - யந்தமிலின்பவ முதினையடியார் - சிந்தையினூரும் தெவிட்டாநறவை - மாசிலாக்குறுமுனி தேசிகமணியை - தேவர்கள்பரவுந் தேவநாயகனே - அளித்தபொன்னம்பலந் தனில்நடம்புரியுங் - திருத்தகுகுஞ்சிதத் திருவடிக்கடவுள்பா - லுற்றவம்பிகைதன் னுறுபெருங்கருணையால் திரைகொழித்திடுமனற் செய்குன்றமதனிற் - சங்கினைத்தாழியாய்த் தானமைத்

## சாற்றுகவிகள்.

ததன்கட் - பொங்கொளிநித்தில வரியினைப்புகட்டி - யிருவிழிமதுவோ டினியமு
க்கனிபிழி-நறுவினைப்பெய்து நகுசெந்துகிரினை - விறகெனவமைத்து விரிமலர்க்
காந்தளை - யெரியெனமூட்டி யினியதாயடிசில்செய் - பரதர்தங்குலச்சிறு மகளிர்
குழுமிய - வரமிகுநெய்தல் வளந்திகழ்நாகை - யம்பதிதனிற்செறி யுங்கிராமத்து-
மேடெனப்பகருமீடினற்பதியான் - சிதம்பரமகிபதி செய்தவத்துதித்தோன் - மு
த்தமிழ்க்கவிஞன் மூதறிவாளன் - அரும்பெறல்யாக்கையின் பெரும்பயனாகு-நா
ற்பொருள்களின்மிக மேற்பொருளாகிய-பெறுதற்கரிய பேற்றினைக்கருதி - யுறுப
யன்தன்னை யடைகுதுமென்னப் - பந்தமகன்றிடச் சிந்தனைசெய்யு - நந்தியெம்
பெருமா னருள்வடிவாகிய - வசவணர்தமக்கருள் வழங்கியதயாநிதி - இசைபெ
றுமாதவத் தோர்க்கிறையாகியும் - உளந்தெளிந்தோர்களு மளந்துணைசெய்கொ
ணு - வன்மைசேர்மாயையை வென்னிடச்செய்த - ஞானசிகாமணி நாற்கதிமே
லா - மோனவானந்த மேமுத்தியென்றுரைத்த - அத்தனல்லமன்ற னம்புயவடிக்
கண்-சித்தமகலாத் தீரவையிராக்கியன் - வீரசைவத்தோர் வியந்துரைபுனிதன்-
பவமகன்றருட்பதம் பெறுவதற்குறுதியார்-தவமீதெனச்சிவ காமிதன்னடிக்குச்-
சதகமெனுஞ்சதச்செய் யுட்பாமாலையை - பொய்யிலாவுளத்தவர் வன்பொடு
புனைந்தான் - ஐயாத்துரையெனு மருந்தவத்தோனே ... ... .. *

---

### வெண்பா.

தென்னாகையையாத் துரைஞானிதென்புலியூர் ... .. *
தன்னா யகன்கிழத்தி தாளிணைக்கு - மின்னூர் ... ... *
சதகமெனும் பாமாலை தான்புனைந்தா னன்பர் ... ... *
இதயங் களிப்பெய்த வே ... ... ... ... *

---

### அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

வில்லைநிகர் புருவமதி வதனமொளிர் குறமகளிர் விளைந்துநாளுங் ... *
கல்லையெறி தற்கிணையாச் சங்கெறிந்து குருகோட்டுங் கவின்செய் நாகைத்... *
தொல்லைவளம் பதியையாத் துரைஞானி முன்செய்தவத் தூய்மையாலே... ...*
தில்லைநகர்ச் சிவகாம சுந்தரிதாட் கணிசதகஞ் சேர்த்தினானே ... ... *

சாற்றுக்கவிகள் - முற்றுப்பெற்றது.

---

திருச்சிற்றம்பலம்.

# தில்லைச்சிவகாமசுந்தரிசதகம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

நீர்சூழ் புலிசைசிவ காமவல்லி நீள்சதகம் ... ... ... *
ஏர்சூழ்ந் திலங்கிடவென் றுந்துணையாம் - போர்சூழ்மோம் ... ... *
அத்தத்தான் செம்பொனவை யண்ணலருள் கற்பகவே ... *
முத்தத்தான் செம்பொ னடி ... ... ... ... ... *

## ஆசிரியவிருத்தம்.

நீர்கொண்டவுலகெலாம் புகழ்தில்லையணிநகர நேமிசிவகாமவல்லி ... *
நித்தியாநந்தசிவ சத்தியுமைசதகமவ ணிடருளிணுலுரைக்கக் ... ... *
கூர்கொண்டகொம்பினன் மாபாரதம்மெழுது குஞ்சரமுகக்கற்பகக் ... *
கொண்டறிருவடிபொற் கடம்பணிதடம்புயக் குமரகுருபரமுருகவேள் ... *
ஏர்கொண்டசெம்பொற் பதாம்புயத்துணைநந்தி யெம்பிரானுதிகணமும் ... *
இசைகொண்டதில்லைவா ழந்தணர்மூவாயிரவ ரென்னும்வேதோத்தமர்களுந் ... *
தார்கொண்டகண்மணி விபூதிபஞ்சாக்கரத் தகையோங்குநால்வர்சைவ ... *
சமயமதில் வருமடிய ரொடுதண்டி யடிகளிரு சரணமுங்காப்பாகுமே ... ..*

## நூல்.

ஐயுடன்கிலியுமுயர் சவ்வுமோமென்றேத்தி யருமையாயுச்சரிப்போர் ... *
ஆவிகொளவேமன்வரு போதவர்முன்வந்துநின் றஞ்சலென்றம்புயமலர்க் ... *
கையமர்த்திக்கொடிய காலனைவிரட்டிமறு கருவிலுமுருதுபாது ... *
காத்தன்புகூர்ந்துமறை முடியினடமிடுமுனது கழலிணைகடந்தருள்வதே ... *
மெய்யீதுபொய்யல்ல வென்னுமுறைநீயே விதித்தனையதிதமான ... ... *
வேதவேதாந்தியே நாதநாதாந்தியே விமலியேகௌமாரியே ... ... *
வையகமதிக்கவரு குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧)

அண்டபகிரண்டமு மனைத்துயிரினும்பரம வணுவுளணுவாய்விளங்கும் ... *
அம்பிகை சிதம்பரி பரம்பரி துரந்தரி யனந்தவித நாமிவாமி ... ... ...*
கண்டன்புகூர்ந்தென் னுளங்களிததும்பநின் கனகசபைதனைமேவியெக் ... *
காலுமறவாதுமன மொழிமெய்களொத்துநின் கழலிணைகள்போற்றிசெய்து ... *

# தில்லைச்சிவகாமசுந்தரிசதகம்.

தொண்டுபுரிவோர்களிற் கடையனாய்நிற்குமித் துணையிலேற்கருள்புரிகுவாய் *
குக்ஷியருளாக்ஷிசிவ சாக்ஷிமிகுமாக்ஷிதரு தூயகருணாகடாக்ஷி ... ... *
மண்டணிகொண்மணிமூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ...(உ)

அருவுருவு முருவருவு மானசிற் சோதிநீ யாதிவடி வானபொருணீ ... *
அத்துவித முடிவுநீ நித்யபர மானந்த வாதார மயவாமிநீ ... ... ... *
ஒருபொருளுநீயதிற் பலவுநீயாசமத் துறவுநீ வேதார்த்தநீ ... ... *
உற்றுனைப்பற்றிவா ழடியவர்களிருவினை யொழித்துவிடவல்லவளுநீ ... ... *
தருமருகரத்திநீ சச்சிதானந்திநீ தாய்தந்தை குருதெய்வநீ ... ... *
சர்வநீயென்னுடைய துன்பத்தையாய்ந்துதவு தாதாவுநீயோனே ... ... *
மருவலர்மலர்க்குழலி குண்டலியனாதியேமாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ங)

அண்டரொடுமுனிவரு மெண்டிசைப்பாலர்களு மறியொணாவமலவாழ்வே ... *
அம்பரி பரம்பரி சிதம்பரி சுதந்தரி யனாதரக்ஷகி சங்கரி ... ... ... *
சண்டன்வந்தென்றனைத் தொடராமலாளவல சாமியபிராமியலகில் ... ... *
சாம்புநதநவமணிக ளாலலங்காரமுறு தண்சினகரத்துண்மேவி ... ... *
விண்டயனுநின்றுதொழ வரியணையின்மீதொளிர் விளக்கமேஞானவடிவே ... *
விதயேயவித்திலுற முளையேயம்முளையின் விரிந்ததருவேயருள்செய்வாய் ... *
வண்டளவகைவல்லி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ச)

அத்தியின்றோறனை யுரித்துமேற்போர்வையென வசமகிழவேற்றமேலோர் ... *
ஆதாரமில்லாம லேறுவதுமெருதூ ணருந்துவதுமாலாகலம் ... ... *
வத்திராபரணம் புலித்தோலெலும்பக்கு மண்டையோடங்கரஞ்செம் ... *
மான்மழுச்சூலமொடு தமருகமுமேந்தியருள் வள்ளலைமணந்தஞான ... *
சத்திதிரி புராகௌரி நித்யகருணாகரி சடாக்ஷரி ஜகத்ரக்ஷகி ... ... *
சங்கரிகுணாதீத சாம்பவிசதாநந்த தாண்டவி த்ரிலோகஜனனி ... ... *
மத்தமதிவேணியணி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ரு)

அந்நாளிலபிராமி பட்டருக்காகவுன் னருளினாற் சந்த்ரோதயம் ... ... *
அமாவாசியிற்காட்டி மன்னன்முத லனைவர்களு மகமகிழ்ந்தேத்தவைத்தாய் ... *
இந்நாளிலுன்னடிமை யென்றுலகுசொல்லவோ ரியல்புநீசெய்யவேண்டும் *
எம்பிரானொடுதெய்வ விடைமீதெழுந்தருளி யெழில்பல்லியங்களார்ப்பப் ... *
பன்னகவணிமணி ஜொலிக்கநான்மறைசொலிப் பண்ணவர்கள்குதூகலிக்கப் ...*
பத்திசெயுமெய்த்தொண்டர் கட்குநற்காட்சிதரு பகரரியஞானவல்லி ... *
வன்னாவலர்க்கருள்செய் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (சா)

# தில்லைச்சிவகாமசுந்தரிசதகம்.

அஞ்சக்கரத்திரவ நாதத்திபேதத்தி யாரணம்புகழ்பரத்தி ... .. *
அளவிறம்பனமோக னம்வித்துவேஷணம் மாகருஷணம்பேதனம் ... ... *
விஞ்சுமுச்சாடனம் வசியமாரணமஷ்ட விதகருமசித்திகளுமே ... ... *
விதிகொண்டமறைமுதல கலைகளுங்கடவுள்ர் விரும்புமைந்தொழிலுமுனது ... *
கஞ்சமுறழ்செஞ்சரண பரமவணுவினைமுதற் காரணமதாக்கொண்டிடுங் ... *
கருதரியநின்சீர் சொலற்கெளியதாகுமோ கருதியென்நாளும்வாழ்த்து ... ... *
மஞ்சனுக்கின்னருள்செய் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௭)

அந்தரிமனோன்மனி சதாநந்திசிற்பரி யகண்டிதாகாரவொளியே ... ... *
அகிலாண்டபிரமாண்ட வண்டபகிரண்டத் தடுக்குகளின் மேனின்றிடுஞ் ... *
சுந்தரிகிருபாவிமல கமலதளநயநியச் சுதசகோதரிகௌமாரி ... ... *
துரந்தரிநிரந்தரி வலாரியொடுமும்பர்க டொழுங்கவினுலாவுநீல ... *
கந்தரிதயாபரி புராதனிபவானிகங் காளிசங்கரிசாம்பவி ... ... *
[illegible]ணி ருத்திராணி யிந்திராணி வாணிபணி கருதரிய சதுராரணி ... *
வந்தனைசெய்வரமருள்செய் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ` (௮)

அஞ்செழுத்தாறெழுத் தோரெழுத்தாகியொளி ரட்டாக்கரத்தின்வடிவாய் ... *
அற்புதமிருந்த வைம்பத்தோரெழுத்தா யகாரமொடுகாரமான ... ... *
பஞ்சமுகவல்லியே யஞ்சலென்றென்முகம் பார்த்துனருடருவதென்றோ ... *
பாருலகமெங்கெங்கு முன்னடிமையென்றெனைப் பகரவருடருவதென்றோ ... *
சஞ்சலமகன்றுன்ற னடியர்கூட்டத்தினிற் சாரவருடருவதென்றோ ... *
சகலவுலகமுமறிய மைந்தவிவண்வாவென்று தானழைத்திடுவதென்றோ ... *
வஞ்சனையிலாவமல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௯)

அஞ்சலென்றுன்வளைக் கரமமர்த்திக்கொடுமை யானநெறியிற்சென்றிடா ... *
தாட்கொண்டுநின துபொன் னம்பலத்தனவரத மனுகியுன்சேவைகண்டு *
நெஞ்சகநெகிழ்ந்துருகி யிணையிலாப்பத்திசெய நீமகிழ்ந்தருள்புரிகுவாய் ... *
நிர்த்தமிடுமெத்தமுடி யத்தனிடமொத்துவளர் நித்தியசிவசத்தியஞ்செம் ... ...*
பஞ்சனையபாதாம் புயத்தியுயர்பீதாம் பரத்திதிகழ்சுந்த்ரத்தி ... ... *
பனகமுடிநடனனய னறிவரியமுதல்விமகிழ் பனைகௌரிகுமரியமலி ... *
மஞ்சனையபூங்குழற் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧௦)

அடிமைக்குநல்லுதவி செய்பவர்களுனையன்றி யம்புவியிலெவருமிலையே ... *
அன்னையேயின்னல்செயும் வெவ்வினையினாலுமிடி யாலுமூவாசையாலுங் ...*
கொடுமைசேரைம்புலச் சேட்டையாலுங்கவலை கொண்டுளமருண்டுவாடிக்... *
குறைசொலியுன்சந்நிதிமு னின்றமுதரற்றுமிக் கொடியனுக்கருளாதுகை... ...*

# தில்லைச்சிவகாமசுந்தரிசதகம்.

விடுவதுத்தமமல்லவே யாத்மரக்ஷணி விலக்ஷணி கிருபாபூஷணி ... ... *
வேதவேதாந்தவுப நிடதவிதிகாசம் விளம்புமகிலாண்டவல்லி ... ... *
வடுநிகர்விழிக்குமரி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧௧)

அருந்தவம்புரிகிலேன் குணமிலேன்மணமிலே னன்பிலேனின்பிலேன்சீர் ... *
ஆலயஞ்சூழுமச் செயலிலேனின்னுடைய வம்பலந்தன்னைநாடி ... ... *
வருந்தித்துதிக்குமறி வேனுமில்லேன்கற்ற வாணருறவதுவுமில்லேன் ... ... *
வாதாடுபெயர்களொடு போராடிவாழ்நாளை வம்பிற்கழித்திடாமற்... ... *
பொருந்துதத்துவநியதி செய்தபுருடோத்தமர்கள் போற்றுஞானாநந்தமே ... *
பூமிசைநின்னடிமையாய் நல்வாழ்வுநாயேன் பொலிந்திடமகிழ்ந்தருளுவாய் *
வருந்திடாதாட்கொளுங் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧௨)

அறுபத்துமூவரோ டான்மபோதத்தினை யறிந்தவருமுந்நாடியின் ... *
அடைவறிந்திரவினை வளர்ப்பவரும்வெளிவிடா தங்கென்றிரேசகித்துப் ... *
பெறுபதத்தும்மென்று பூரகமடுத்துப் பெருஞ்சிகரமதிலடுத்துப்... ... *
பிசகாதுமூலமுத லாறுதலமேலாய்ப் பிறங்குபொற்கமலாசனத் ... ... *
துறுபரமசுகநாடி வழியமுதமுண்டுண் டுறங்காதிருக்குமவரும் ... ... *
உன்னருகிருக்கவறி தேயடிமைவீணாக வுழல்வதுவுமழகதாமோ ... ... *
மறுவற்றசிவஞான குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவ முயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧௩)

அகிலபுவனங்களெங் குந்துதிசெய்சித்திநிலை யாயினும்பெறுவதில்லை ... *
அந்தமிகுவீணைதம் புருசங்கநாதமுழ வஷ்டவொலி யிஷ்டமுணரேன் ... ... *
சகிதமாயெண்ணற்ற வகமுகத்தரிசனந் தந்திடவுநோக்கியறியேன் ... *
தாபத்திரையாக்கினியி லகம்வாடியுழல்கின்ற தமியனுக்கருள்வதென்றோ ... *
விகிதமாயுன்னடி யருச்சனைசெய்பழவடியர் வேண்டுவவெலாமளிக்கும் ... *
வீரிகௌமாரியதி காரியருள்வாரிபுது வேரியுறுதாரிநீரி ... ... ... *
மகிடனைத்தெறுவிசையை குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௧௪)

அனன்மேல்கப்பட்ட மெழுகுபோலென்னுள்ள மனவரதமுருகுதந்தோ ... *
அஞ்சலேல்னவந்துநின் செஞ்சரணமலரளித் தாண்டடிமைகொள்வதென்றோ *
தனமேலுநில்மங்கையர்கண் மேலவாவொரீஇச் சஞ்சலமுநீங்கிநின்ற ... *
சாதுசங்கத்தவர்க ளுறவிலேநின்னரிய சந்நிதியேசந்நிதியென்று ... ... *
கனவினிலுமறவாம லுறுதிகொண்டலர்கொண்டு காணிக்கைகொண்டுளறுபுன் *
கவிகொண்டுபோற்றியுன தருள்கொண்டுவாழ்ந்திடக் கனிவுகொண்டெனையாளு
வனசமலர்வாணிபணி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... [வாய்
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே. ... (௧௫)

அதீதப்பெருங்கடற் சச்சிதாநந்தவெள மதினின்றுமூழ்கியேற ... ... *
அரியதவமில்லாத புலையனுணுயினு மவாவொன்றுபோராடுதே ... ... *
கதியடையவேத்துவின் றேனுமுன்கணவனைக் கல்லாலடித்துமொருவன் ... *
காலாலுதைத்துமெச் சிற்றசையையூட்டியுங் கருதரியமுத்திபெற்றார் ... *
திதியிலேனவைசெயத் தணிவிலேனென்னைத் தியங்கவிட்டகலவேண்டாம் ... *
திரிபுராந்தகியமலை யொளிர்மரகதாங்கிமறை தெரிவரியகருணாகரி ... *
மதியனையவதனியே குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கசு)

அருணம்புயத்திசிவ சிங்காசனத்தியென் னாயிமாயாவினோதி ... ... *
அடியவர்களுண்மைநிலை நாடியம்பலமுதவு மம்பலவனுடனடித்தே ... *
திருவெழிற்றிறமையுஞ் சகலமுமளிக்கின்ற தேவியம்பிகைவராகி ... ... *
தேவர்முதலனைவரும் பூலோகபுவனமுந் திதிசெயுமகாகாரணி ... *
தருவொத்தகைத்தலச் சங்கரியலங்காரி சச்சிதாநந்தரூபி ... ... *
சந்தமுயர்மந்திரசொ ரூபியென்சிந்தனை தணித்தருள்வதென்றுபுகலாய் *
மருமலர்த்தண்குழலி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கஎ)

அரகரசிவாசிவா வாசிவாவென்றோது மன்பருக்காநந்தமே ... ... *
அதீதப்பெருங்கருணை வெள்ளமேயென்னுயிர்க் காதாரமானதுணையே ... *
சிரமதுயர்கோபுரஞ் சிந்தையாலயமதித் தீபமேற்றிச்சந்ததஞ் ... ... *
செப்பரியவொப்பிலா மந்த்ரமலராலருச் சித்துனைப்பூசித்ததிற் ... ... *
சுரர்முனிவருரகர்பன் னகராதியர்கணன்மை தோய்ந்துகனமேன்மையுற்றார்...*
சுகுணியஃதில்லாத வேழையேனுய்ந்திடத் தோன்றிநல்வரமருளுவாய் ... *
வரகௌரியமலைசிவை குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கஅ)

அஞ்சலென்றோடிவரு மம்யமென்றல்லலா மாங்காரவாரிதியினின் ... ... *
றுழாமனற்கனாயி லாக்கிடுங்காலமென் றமரர்முனிவரர்வியக்கத் ... *
தஞ்சமெனவந்தவெனை வாவென்றழைத்துடற் றைவந்துவாழிசொல்லிச் ... *
சகலகலையட்டாவ தானமுயர்சித்தியுந் தந்துமகிழ்வேலையென்று ... *
நஞ்சணிகளத்தியுனை நாடினரனேகர்வெகு ஞானசித்திகளடைந்தார் ... *
நானொருவனேழைவா டுவதழகதாகாது நாதாந்தமோனமெல்லி ... ... *
வஞ்சகமிலாதருள்செய் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கக)

அந்தரிதுரந்தரி சிவாகமிமனோன்மணி யமோகிசிங்காரதருணி ... ...
அம்பரிதிகம்பரி பரம்பரிசிதம்பரி யகாரிசொலுகாரிவீரி ... ... .
சுந்தரிநிரந்தரி துவாதசாந்தத்தினிற் றுரியங்கடந்தவாமி ...
அருவுதற்கரியவான் பொருளறிஞர்காண்கின்ற சோதியேநீதருள்ள ...

மந்திரத்திறைவியே மாமேருவுச்சிவாழ் மாசிலாமணிவிளக்கே ... ... *
மாகேந்திரத்தருளும் வசிக்கின்றகர்ரணி மகாமந்த்ரராஜவமலி ... *
வந்தருள்செய்ததியீது குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௨௦)

ஆயிதிரிசூலியறு கூலிசகசாலிநிறை யாருயிரடங்கலுக்கும் ... ... *
ஆதாரமாகிவரு மாநாயிராமிவிரி யண்டாண்டபுவனமெல்லா ... ... *
மாயைகொடுநீயுநின் மகிணனுநடாத்திவழு வாப்பஞ்சக்ருத்தியங்கள் ... *
வைத்துவிளையாடுசிறு பெண்பிள்ளைகலைகணிறை வாணருளமேவுகிள்ளை ... *
கோயிலெனவடியார்க ளிதயாம்புயத்தினிற் குலவிவளர்மடவன்னமே ... *
கொத்தடிமையென்றுநான் முறியெழுதியீந்தனன் குறையென்கொலோகடாக்ஷி *
வாயினூற்றுதிமூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௨௧)

ஆருமிவ்வவனிதனி லொருதுணையுமில்லையுனை யன்றியம்மம்மதாயே ... *
அன்புவைத்துன்பதங் கதியென்றுநம்பினே னுண்டருள்செய் புல்லர்முன்போய்த்
தாருமணிநிதியமே யெனவுரைத்திரவாத தன்மையுமெனக்களித்துத் ... ... *
தாவென்றுவருமவரை வாவென்றளிக்குமத் தயைபொறையிரக்கமீந்து ... *
மாருதமெனக்கால படரொடுபகட்டில்வரு மறலிமனமஞ்சியோட ... ... *
வாதுபுரிகின்றநற் றீரமுமளித்துரிய மைந்தனென்றனையாளுவாய் ... *
வாருலகமேத்திடுங் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (௨௨)

ஆதியுமனாதியாய் நின்றஜகஜோதிநித் தியானந்தவல்லிகௌரி ... ... ... *
அவ்வுவ்வுமோமென் றகத்தினினினைக்குநல் லடியவர்முன்னோடிவந்து ... *
நீதிகணிலைத்திட வுளங்குதுகலித்திட நினைத்தவையனைத்துநல்கி ... ... *
நின்மலசொருபதரி சனமுதவியீடேற்று நீவிநற்கரகபாலி ... ... *
சோதித்திடேலடியன் மிகவுமோரேழையித் தொல்லுலகில்வாடனன்றே ... *
தோன்றுதபாலனிவ னென்றெண்ணிவந்தெனது துதிகொண்டுவரமுமருள்வாய் *
மாதிரமெலாம்பரவு குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௨௩)

ஆதிக்குமாதிநீ யண்டாண்டமுழுவது மழித்தாக்கியாள்பவளுநீ ... ... *
அன்னைகுருதெய்வநீ யென்னமறைசொல்லு மதறிந்துமொருதுறையினின்று... *
சாதிக்கவறியாத வறிவிலிக்குனதுதயை தான்வந்துமுற்றுமோதான் ... *
சர்வபரிபூரணியென் னுள்ளக்கருத்தோர்ந்து தள்ளிவிடினீதியாமோ... ... *
...ாதிக்கும்யமனாதி கால்படரணுகாமல் வந்தெனையிரக்ஷிகண்டாய் ... *
...டனுடறநிகௌரி யமலைபைரவிகுமரி வளர்சுருதிமுடியினடனி ... ... *
...க்கெலாம்போற்று குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
...சவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௨௪)

ஆயிரத்தெட்டிதழ்க் கமலபீடத்தினி லமர்ந்ததற்பரசொரூபி ... ... *
ஆநந்திதிரிசூலி யனுகூலிகுணசாலி யாயிதிரிபுரசுந்தரி ... ... ... *
நாயினுங்கடையனென் றிகழாமலாட்கொண்டனை நம்பினேன்கைவிட்டிடில் ... *
நானிலமெலாநகைத் திடவம்பலத்திலே நான்மடிபிடித்திழுப்பேன் ... *
வாயிலாப்பேதையென் றெண்ணிடேலெந்தையுன் மகிணனொடெடுத்துரைத்து *
வாதாடியோவென் றாற்றுவேனுனையெந்த வகையிலும்விடேனம்மணி ... *
மாயிருதலர்துதிசெய் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (உரு)

ஆரருகுமதியணியு மம்பலவனும்பர்தொழு மத்தனெழிலுற்றமுத்தன் ... ... *
ஆரணனுநாரணனு மறிவரியமெய்ஞ்ஞான வற்புதாகரவிசித்ரன் ... ... *
சாருமடியாரிடர் தவிர்த்திடக்கங்கணங் தங்குசெங்கையங்கணன் ... ... *
தரியலர்கள்புரநொடியி லறவெரியநகைபுரி சதாநந்தன்மனையாட்டியே ... *
பாருலகமெங்கெங்கு மேத்தெடுக்கத்திருப் பல்லாண்டுமிகமுழக்கப் ... ... *
பண்ணவர்கண்மலர்மாரி பொழியவெனைவாவென்று பத்தரிற்கூட்டிவைப்பாய் *
வாரிலகுதனவல்லி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (உசு)

இங்காருமில்லையிவ் வேழைக்கொருதவியென் றிதயத்தறிந்திலாயோ ... *
எவரெவரிருந்தென்ன வவரவர்க்கவர்களே யென்னுமுனாசாரதமலவோ ... *
சிங்காரமிகுவஞ்சி சிவபிரானிடமருவு சின்மயானந்தவல்லி ... ... *
தேவர்கின்னரருரக ரனைவரும்பரவவரு டேக்குமாராவமுதமே ... *
அங்கநோய்மிகுமாசை மமதைகலியனுநாம லன்புவைத்தென்னையாள்வாய் ... *
அயனரியுருத்திரன் மூவருங்குற்றேவ ல்துபுரியுமபிராமியே ... ... *
மங்களாகரவிசய குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (உஎ)

இரவிமதிமுதனவக் கோள்களையமைத்தெழி லிராசியீராறமைத்தே ... ... *
இசையுமிருபத்தே ழுடுக்கள்வாரங்கண்மதி யிருதுவருடங்களோதற் ... *
கரியயுகமும்மின மனேகமுமமைத்தெண் ணடங்காதபேதம்வைத்திவ் ... *
வகிலசரவசரமு நடத்திவருநின்னுடைய வருமையெவரறியவல்லார் ... *
தருணகணபணவரவின் முடிமருவுபுடவியுடை தனையுணுமையனையகுழலி ... *
சகலகலையுணரறிஞ ரறிவிலனவரதமொரு தநித்திமியெனநடஞ்செய் ... *
வருணபங்கயசரணி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (உஅ)

இன்னமுஞ்சனனமர ணக்கயிற்றிற்றொடுத் தெற்றிவிளையாடல்செய்யேல் ... *
ஈனர்நேசந்தொட்டு மானமதிகெட்டயல ரேசவிளையோர்பகட்டு ... ... *
மன்னநடைமாதர்மய லிற்பட்டுமனமிக வலைந்திட்டுநன்மைவிட்டே... ... *
ஆட்டநலியாமலிரு தாட்டுணையளித்தெனக் கருள்புரிவதென்றுதாயே ... *

தன்னையறிபவர்மனத் தாமரையில்வளர்கின்ற தனிநடைப்பேடையனமே ... *
சண்டாளர்நெஞ்சைப் பிளந்திடுந்திரிசூலி தலைமாலிகாபரணியே ... *
வன்னியெழில்வாய்ந்திடுங் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௨௧)

இருபாதசேவைதந் தெறிதிரைக்கடலுலக மெங்கணுமதிக்கவருளா ... *
தியாதுமறியாதசிறு நாயினுங்கடையனென் றெண்ணியேதள்ளன்முறையோ... *
கருவிலமராமலிற வாமலிருகாலைக் கருத்திற்பொருத்தியோங்கு ... ... *
காலனைவிரட்டிநின் னடியார்கள்குழுவிற் கலந்திருந்துய்வதென்றோ ... ...*
திருமுதலரம்பையரு மாலாதிதேவருஞ் சென்றுபணிகின்றசரணி ... *
சீலமதிவேணிபௌ ராணிகல்யாணிருத் ராணிசிவைநாராயணி ... ... *
மருமணக்குங்குழலி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியமையே ... (௩௦)

இன்னமுந்தாமசஞ் செய்வதுன்னருடனக் கியல்பல்லவாதிமுதலா ... *
வெட்டிரண்டறியாது தட்டுண்டுநிலையிலா வேழையேனேதுமறியேன்... ... *
அன்னநடைமாதர்பான் மனம்வைத்தபித்தனென் றலர்தூற்றவந்தபேயன்... ...*
ஆயினுங்கைநழுவ விடிலுலகவன்னையென் றறையுநின்பெயர்பொய்யாமே ... *
முன்னுமறைகாணரிய முதல்வியேமுக்குணநன் மூர்த்தமேசித்தியருளும்... ...*
முக்கோணநவகோண நாற்பத்துமுக்கோண மொழியந்த்ரமந்த்ரரூபி ... ... *
வன்னமரகதவல்லி குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௩௧)

உத்தமதபோதனர மைத்தபூருவமொழியி னொருமொழியையேனுநண்ணி ... *
உண்மையுயிராகமா யெண்ணியாமையதா யொடுக்கிரவிதன்னினின்று ... ...*
முத்துநவரத்னமே சித்தர்குலதெய்வமே முற்றும்வகையெற்கருளுவாய் ... *
முச்சகத்திச்சையறு நிச்சயமுணாத்தரிய முத்திநிலையுந்தருகுவாய் ... *
சத்துரியசித்தே சதாநந்தமேசகல சமயமுதலாகிநின்ற ... ... ... *
சங்கரிதிரிலோகபரி பூரணிசடாதரி சராசரநிரஞ்சனிநிருபா ... ... *
வத்துவெனவளர்மூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௩௨)

உனதுசெயலல்லாமல் வேறுசெயலில்லையிதை யுலகத்திலெவருமறிவார் ... *
ஒருகுழவிமலசலம் விடுத்தலைந்தடர்புழுதி யூடாடியாபாசமாய் ... ... *
இனமுடையபேர்களுங் கண்டுதொடமனமொல்கு மியல்புகண்டீன்றதாய்வந்... *
தெந்தாயெனப்புகழ்ந் தேந்திநறுநீராட்டி யின்னமுதநிறையவூட்டி ... *
அணையதாலாட்டிமகி ழுறுவதுலகதுபோலு மைம்பெரும்பாதகத்தோ.. ...*
டளவிறீங்கடியேனு ஞற்றிடினுமவைவிட வகற்றிநல்லருள்புரிந்தாள் ... *
மனவுசிதர்தொழுமூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௩௩)

உனதினருள்வேண்டித் தவம்புரிந்தேயுலகி லுத்தமர்கள்பெற்றசித்தி ... *
யொன்றல்லவணிமாதி யியமாதிவசியமுத லொருகோடிசொல்லவென்றுன் ... *
மனதிற்குமெட்டாது வாயினுன்முடியுமோ மடமையேனவைநாடிவீண் ... *
வாதாடவில்லைநா னுனதடியனென்றிக மதிக்கவொருவரமுமீந்தே ... ... *
எனதிதயமலரிலநு தினமுமெம்பெருமாளொ டினிதெழுந்தருளிநாயேற் ... *
கிசையாக்கிவசைபோக்கி யிருணீக்கியருடேக்கி யெனைநோக்கியாளவேண்டும் *
வனமாலிகாமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... .. *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ...(௫௪)

உரித்தாகவனுதினமு மென்மனக்குறைமுழுது முற்றுனைப்பற்றிநின்றே ... ... *
உண்மையாய்நீகேட் டிரங்கியருள்செய்யவு முனைப்பனஃதென்னவென்றுற் *
கருத்தரித்தெய்க்காம விருவினைப்பகுதியிற் காயந்தவிக்காமலுங் ... ... *
கனகசபைநாதரரு குனதுதிருவடியிற் கரங்குவித்தேநிற்கவும் ... ... *
வருத்துமிகுபோகபந் தங்களையறுக்கவொரு வழிகாட்டியருளையூட்டி ... ... *
மயலோட்டிவழிகூட்டி யினிதருள்செய்சமயமிது வாராகிநித்யதருணி ... *
மருத்துமுதலனைவர்துதி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (௫௫)

உற்றார்கள்பெற்றார்கண் மற்றாருமில்லைநீ யுண்மையெனவுறுதிகைக்கொண் ... *
டுன்னையநுதிநமடுத் தோதியானலறுவது னுள்ளத்திலறியாய்கொலோ ... ... *
செத்தார்கள்போலக் கிடந்தேழையாளுந் திகைத்துத்திகைத்துருகியே ... *
தெய்வமணியொடுகோய்ச்சு மணியனையசெய்யுட் டிரட்டியொருசதகமாக்கிச் ... *
சத்தானவுனதுதிரு வடியினிற்சாத்திடச் சார்ந்தனன்கருணைகூர்ந்து ... *
தனயவிவண்வாவென் றழைத்துலகறிந்திடத் தனிமொழியளித்தாளுவாய் ... *
வத்தானமணிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௫௬)

உல்லாசவல்லியொளிர் திரிசூலிஸ்ரீங்காரி ஓங்காரியாங்காரிநன் ... ... *
குற்றமாதவமேறு பத்தர்க்குவேண்டுவ வுவந்தளித்தாளுமிறைவி ... ... *
சல்லாபசகலசாஸ் திரமெய்யருத்தமாய்ச் சார்ந்திடுமஹாவிதரணி... ... *
சடக்ஷரிநவாக்ஷரி த்ரியாக்ஷரியேகாக்ஷரி சராசராத்துமரக்ஷணி ... ... ... *
அல்லாமல்வேறுதவி யில்லையென்றுனைவந் தடுத்தனனுவந்தாளுவாய் ... *
ஆகாதெனத்தள்ளி விடிலேழையுய்வனோ வவதாறுனக்கன்னையே ... ... *
வல்லார்கண்மகிழ்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௫௭)

உள்ளபடியுறுதிகொண் டெள்ளளவுமகலாம லோங்காரவாசியூணி ... *
யுரிமையாய்க்காலறிந் தேமடக்கிக்கொண் டுறங்காமலுணர்வைநாடிக் ... ... *
கன்னமதுபுலைகொலைத் தொழிலாதிநீக்குமிகு கல்விசெறிமமதைதள்ளிக் ... *
கருதரியநாமரு பப்பிரபஞ்சங்கான னீரொனக்கண்டுதேறி ... ... ... *

தெள்ளமுதமேதெவிட் டாததேனேயன்பர் சித்தத்திலூறுதெளிவே... ... *
செனனமரணத்துழன் றிடுபயமுநீங்குமச் செய்கையுமளித்தாளுவாய்... ...*
வள்ளலேவளர்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௩௮)

உன்னையாறுதியே யென்மனதிலெண்ணவும் முன்றனருளேயளித்தாய்... ...*
ஓதுமென்னுள்ளத்தி லன்பதமிருந்தாடு மொருபொருளையும்மளித்தாய் ... *
என்னைவாவென்றுரிய வம்பலமழைக்கவே யின்னம்வெகுநாட்செல்லுமோ ... *
ஏதுமறியேன்வாது புரிகின்றபேயனென் றிகழவொண்ணுதுதாயே ... *
உன்னரியமேருவே யும்பர்தொழுதாருவே யுவ்வவ்வுமாகிநின்ற... ... ... *
ஓங்காரபிரணவப் பாங்கானமண்டபத் துள்ளொளிர்பராசத்தியே... ... *
வன்னமணியேமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (௩௯)

உன்செய்கையன்றியென் செய்கையொன்றேனுமிலை யுறவில்லைபகையுமில்லை .. *
உயர்வில்லைதாழ்வில்லை பாவபுண்ணியமில்லை யொன்றிரண்டென்பதில்லை ... *
என்செய்கைமேவில்லை நாலில்லையைந்தில்லை யிடர்நரகும்வீடுமில்லை ... ...*
ஏகமுமநேகமிலை திரிபதார்த்தத்தன்மை யிதுவெனவறிந்துகொண்டே ... *
மின்சனனமரணபய மொருவிவாழ்வார்க்கென விளம்புமுன்சொற்றெரிந்தும்...*
விரவியறிமதியிலா வேழைக்குனருள்வேண்டும் வேண்டும்விரைவாயளித்தாள் *
மன்பதைகடொழுமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௪0)

உன்னைவிடவென்றனுக் காதாரம்வேறில்லை யோங்காரிஸ்ரீங்காரியே ... *
உமையேபராபரி திகம்பரிசிலம்பணி யுருத்ரிகங்காளிகௌரி ... ... ... *
என்னைநீதள்ளிவிட லாகுமோசர்வாணி யேழைபங்காளிதேவி ... ... *
யென்னுள்ளம்வாடுவ தறிந்திலாயோபாவ மிதுசமயமருள்புரிந்தாள்... ... *
சொன்னசொற்கற்றுநவில் கிள்ளைசொற்குலகுமகிழ் சூழல்போலென்சொல்லினிற்
சுந்தரிநினருளைவைத் தாளாதுவிடி லுலகு தூறுசொலுநிமலிநீலி ... ... *
வன்னிகிலையடிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பல்மேவு வாலசிவகாமியுமையே ... ... (௪௧)

உனக்கினியெனடிமைசொல் லுமையிகத்தம்மம்ம வொழியாதவாணவத்தால் ...*
உற்றபெரியோர்களைத் தூறியுமுலகெங்கு மோடிமனம்வேசாறியும்... ... *
எனக்குரியபெயரோடு வாடியுமிதமகித மெண்ணுதுதடுமாறியும் ... ...*
ஏருவழக்கெடுத் தோதியும்பலர்தூறு மிவனெனச்சொற்றரித்தும் ... ... *
அனற்காணுமெழுகாகி யெய்த்திளைத்தேனையினி யாண்டினருள்செய்திகண்டாய்*
அரவொலிகள்செயுமடியர் பவவினைகளறநொடியி லருள்செய்திரிபுராசுந்தரி *
வனத்துளபமாயன்மகிழ் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௪௨)

என்றனைக்காத்திர க்ஷித்தினருள்செய்யமுதி ரோகாக்ஷரத்தைமுன்னம் ... *
என்னுளத்திற்கொளுத் திக்கவலையிருள்கெடுத் தெழின்மிகச்செய்தலுமுயர் ... *
தந்தைதாய்குருதெய்வ மாகியவ்வவ்வுரிமை சாதித்திடலுநன்மைசேர் ... *
சாதுசங்கத்துறவு வேண்டிநற்றமிழ்மாலை தான்செயத்தயைசெய்தலும் ... *
வந்தனைசெய்யடிமையாக் குதலுநின்புதியதண் மலரடிக்கடமையாமால் ... *
மகிடன்முடிநெறுநெறென நடனமிடுவிசையைதிரு மறுவிலகுமால்சோதரி ... *
மந்த்ரவடிவாமெழிற் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௪௩)

எந்நாளுமுன்னுடைய சந்நிதியைவந்தடுத் தினியமொழிகொண்டுநாடி ... ...*
யேற்றித்துதிக்குமிப் புன்சொற்கிரங்கிவந் தென்னைநீயடிமைகொள்வாய் ... *
முன்னைநாட்கவிராச பண்டிதர்தன்னருமைதனை மூவுலகுசொல்லநின்றாய் ... *
முதிர்தவப்பட்டருக் குனதுதிருநாமமெனு முத்திரையளித்துவந்தாய் ... *
இன்னுட்டமுற்றிகற் பளகறுத்தவர்சுழினை நாடியறியெம்பிராட்டி ... ... *
யேகாந்தநாதசுழி யோகாந்தமேவுமொழி யேவாய்ந்தசோதிவிழியே ... *
வன்னுவலர்கள்பரவு குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (௪௪)

என்மனதிலெண்ணுமெண் ணென்றல்லகோடியுன் னிதயத்திலறியலாமே ... *
எல்லாமறிந்தவர்க் கறியாதபெயர்கள்சொல் லேற்குமோவானுலுமென்... ...*
உன்மனமிரங்கிநல் லருளளித்துறுதியா மொப்பிலாவரமுமுதவி ... ... *
உயரநின்றிழியமுத முண்டுறங்காதநிலை யுந்தந்திடிற்புண்யமாம் ... ... *
சென்மசென்மங்கடொறு முன்னின்றிரக்ஷித்த செல்வமேகருணைவாழ்வே ... *
திகிரிவளையணிசிகர ஞெடுபுலவர்பணியவரு திரிபுராபைரவிகுமாரி ... ...*
மன்மதற்கெழிறந்த குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௪௫)

எத்தனைச்செனனங்கள் சென்றதோவவையிலுய ரொச்சனனமதனிலேயோ ... *
என்னபுண்ணியநா னியற்றினேனோவிருக் கின்னமறிவரியநின்றாட் ... ...*
பத்திநான்செய்யவித் தேகமுமளித்தரிய பஞ்சாக்கரத்தினுண்மை... ... *
பாலித்துமணிமந்தி ராதிசித்திகடந்து பாரினிற்பெருமையீந்து... ... ...*
அத்தலாபமுமளித் தனையிவைகள்போதா தருட்டிறம்வழுத்திமூலத்... ... *
தம்மென்றழுத்தியும் மென்றூதியமுதமுண் டழியாதநிலையுமருள்வாய் ... *
மத்தன்மகிழ்தருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (௪௬)

எப்பொழுதுன்னருள்வந்து கிட்டுமென்றுயர்தீர வெங்கும்பிரசித்தமாகும் ... *
ஏழைமனமகிழுமா வுலகதரிசனமெய்து மென்றுவாவென்றழைத்தே ... *
ஒப்பமிட்டடியார்க ளுதிசொல்லவுளமுவந் தரிமைதந்தல்லனீக்கி ... ... *
ஓங்காரவட்டமிசை நீங்காதிருக்கின்ற வுண்மைவந்தெய்துமறியேன் ... *

செப்பனையகனதனச் சிங்காரிமங்காத செல்வநிறைராஜேஸ்வரீ... ... ...*
திடமுடையவடையலர்கண் மடமைவிடவடுபடைத் திரிசூலிகரகபாலி ... *
மைப்புயற்குழன்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (சஎ)

என்னறிவுகருவிகர ணாதிகாரியமாகி யிதயாம்பரத்துளாகி ... ... ...*
ஏகாந்தமாகநின் மகிணனுடன்விளையாடி யெப்பொருளுமுன்னிலாக்கி ..., *
உன்னரியசிவயோக மேவுமுன்மத்தரோ டோடிசுத்தோதகத்... ... ...*
துழியாடிதீயவினை யைச்சாடிமெய்ஞ்ஞான வுரிமையுந்தந்தருளுவாய் ... *
மின்னலிடையன்னநடை மலர்மாதரோவல்புரி வேதவேதாந்தமௌனி... ...*
விண்டனந்தங்குமய னிந்திரன்கந்தருவர் விந்தையுந்துதிசெய்சரணி ... *
மன்னுயிர்க்காதாரி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... .. ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (சஅ)

எப்போதுமொருபோது கொண்டருச்சனைகளு மியற்றியறியேனெப்பிலா ... *
யெம்பிரானேடுநீ வாழுந்தலங்களுக் கேகியறியேனனந்தம் ... ... *
தப்போதுகின்றபொய்க் கள்ளனின்றுள்பரவு தாபதனையெள்ளுசுள்ளன் ... *
தருமநெறியறியாத பாவியுள்ளஞ்சஞ் சலத்தினிற்றடுமாறுதே ... ... *
இப்போதெழுந்துவந் துன்னுளமிரங்கியே யென்றனையிரக்ஷிகண்டாய்... ...*
இசைகொண்டமாதவர்கள் நசைகொண்டுபணிகின்ற விறைதுங்கர்மகிழ்தங்கமே*
மைப்போதுகமழ்குழலி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (சகூ)

எப்பொழுதுவருகுவா யிவ்வுலகமறியவே யென்னையுநலடிமையாக்கி... ... *
யேகபரமானந்த விருபதத்தருகினி லிருக்கவுமெய்யருள்புரிகுவாய் ... *
தப்பொன்றிலாதுதாண் டவராசரோடுநீ தானெழுந்தடியர்வாழ்த்தத்... ...*
தனயவிவண்வாவென்று பிரியமொழிசொல்லிவரு தாபத்ரயங்கணிக்கிக் ... *
கொப்பொடுமிலங்குகுழை மானார்மயக்கறுங் கொள்கையுமளித்தாளுவாய் ... *
கொடியநிசிசரருட றடிந்தநாராயணி கொண்டல்வண்ணன்றங்கையே ... *
மைப்பொலிந்தோங்குகட் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (ரு0)

ஏறுகலையீராறு மாறுகலையீரா றிலங்குகலைநீதியெட்டாம் ... ... ... *
எட்டையெட்டுன்னழிவி லுறவாக்கிமறையைமதி யிரவியொடுசேர்த்துநின்றால் *
மீறிவருமியமன்முதல் வினைகளுக்கஞ்சாது வெகுகோடிசித்திமேவி ... *
மேதினியிலேயிருந் தரசாளவல்லையென மேன்மைமொழிதந்துவந்தாய் ... *
ஆறுமதமேழுநிலை யூறுமுக்கட்களி றளித்தசிவசத்திவெற்றி .. ... *
அட்டாக்ஷரத்திமுதிர் வெட்டாதகோணத்தி யகமலைவுநீக்கியருள்வாய் ... *
மாறிலாவருண்மேய் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (ருக)

ஏகாக்ஷரத்தியரு மறைசொல்லுவாமிநீ யேகாந்தவல்லியுமைநீ ... ... *
இமயமுதனவலோக பேதநீவிரிகிரண விருசுடருமுச்சுடருநீ ... ... *
சாகமலிதருவாதி பேதமுமபேதநீ சச்சிதானந்தமயநீ ... ... *
சகலகேவலமுநீ யாராறுமேநின்ற சாக்ஷிநீமாக்ஷிவிட்டுப் ... ... *
போகாதவண்ணமடி யார்களையளித்தருள் புராதனிநாராயணியுநீ ... ... *
போதநீநாதநீ வேதநீயாதார பூதபௌதிகமென்பநீ ... ... ... *
வாகானநன்மைநீ குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (௫௨)

ஐயைந்திரட்டியொன் றுயவக்கரமாகி யகிலமுற்றையுமளித்தே ... ... *
அவையுயப்பாலளித் தான்மசுத்தியுமுதவி யாதரித்தாளும்வல்லி ... ... *
ஐயையம்பிகைகௌரி துய்யபரமானந்தி யச்சுதசகோதரியெழில் ... ... *
அபிராமிசுகபூமி துதிவாமிகுறவள்ளி யம்மைமகிழ்கின்றமாமி ... ... *
ஐயைம்முகத்தவர்க் கணியாகியமுதாகி யாளுநித்தியவிலாசி ... ... ... *
அடியனுடல்பொருளாவி மூன்றுனதடைக்கலமென் னன்னையேயாண்டருளுவாய்
வையமகிழ்தருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௫௩)

ஒளியாகிவெளியாகி நின்மலநிராதார வோங்காரமேருவளையே ... ... *
ஒட்டியுயிருக்குயிர தாய்நின்றுமோனநிலை யுற்றபரமானந்திமீ ... ... *
வெளியானவம்பரி சிதம்பரீசபைநாடி வேண்டுவார்தன்னைமெச்சி ... ... *
விண்ணவருமண்ணவரு மெண்ணரியவேதியரு மேவியேசூழ்ந்துவாழ்த்தக் ... *
கிளியானமொழியானி னைத்தவையனைத்துமருள் கேடிலாச்சௌபாக்கியமே ...*
கிளர்ந்தெறிதிரைக்கடற் புடவியிசைநினதுபுகழ் கேட்டுளமுவக்கவாள்வாய் *
வளியாதிசாயுச்சிய குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ...(௫௪)

ஒளியாகிவிரிசுடரி ஹ்ரீங்காரமுச்சுழியி னுச்சிமூக்கோணவளையில் ... *
ஊமையாமோரெழுத் தாகியேயெங்கெங்கு முண்மைகுடிகொண்டபளையே ... *
வெளியாயனுதியாய் வேதவேதாந்தமுதல் விரிவாகிநின்றபொருளே ... *
விண்ணவர்கள்சிவயோகி மெய்ஞ்ஞானியர்களும் விளம்புதற்குரியபொன்னே ...*
அளியேறுகன்னியே யாருயிர்க்கன்னையே யடியேனைரக்ஷிகண்டாய் ... *
ஆகமபுராணகலை யோதுமவருள்ளத் தமர்ந்தபரதேவியுமையே ... ... *
வளியானநாதமே குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௫௫)

ஒன்றுயான்சொல்லுகின் றேனதனையென்னென் றுவந்துநீகேட்கவேண்டும் ...*
உறவின்முறைமனையாதி தாபத்திரையங்களி லுழன்றழன்றேங்கிநைந்து ... *
நன்றியறிபவருறவி லாதலைந்தேங்குமெனை நன்குவந்தல்லனீக்கி ... ... *
நாடரியபேரின்ப வீடளித்தோங்கார நாட்டமும்விளைந்தளிந்தாள் ... ... *

கன்றழைப்பாலூட்டு மாவெனவிரைந்தடியர் கவலையையறுக்கும்வாழ்வே ... *
காலாயுதக்கொடிக் கந்தனைத்தந்தசங் கரியரியஞானகௌரி ... ... ... *
மன்றணிகள்செறிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ருசு)

ஒருகணமுமொழியா விசாரம்வந்தநுதினமு முனதுபதபத்திநிலையை ... *
ஒட்டாமல்வட்டவா ரிதியுலகமெங்கெங்கு மோடித்திரிந்தலுத்தே ... *
உருகியுளம்வாடியே மறுகித்தவித்துன்னை யுண்மைவைத்தன்புகொண்டே ... *
ஓங்காரமேருநுனி நாற்சதிரமேல்வாயி லூடேகியாறுதலமும் ... ... *
மருவிமெய்யானந்த வமுதமுண்டின்பமுடன் வாழ்வுற்றிருக்கநாடி ... ... *
வருந்துவதுனுள்ளத்தி லறியாய்கொலோதெய்வ மாதர்பணிதருகுமாரி ... *
வருகவருடரமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ருஎ)

ஓதுதற்கரியபொன் னம்பலத்துறைகின்ற வோங்காரிறீங்காரியே ... ... *
உயர்பஞ்சசிங்கா சனத்திலுறையமுதமே யோரெழுத்தானவிண்ணே ... *
யேதுநானென்றுரிய நாதத்தினவில்கின்ற விமயவர்க்குதிகபாலி ... ... *
இகபோகபரபோக விச்சையினிராசையுள வேதமற்றவர்தன்வாழ்வே ... ... *
வாதுபுரிமூடர்பா னில்லாதமெல்லியே மதிவேணியணிகல்யாணி ... ... *
வகுத்திடும்பதினென் புராணியபிராணிமலர் வாணிபணிசர்வாணியே ... ... *
மாதரரசேயருள்செய் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ருஅ)

ஓதவதுனடிமைகுறை முற்றுமோர்ந்தேலாத வொருபேதையிவனென்னவே ... *
உலகமுழுதுனவடியர் மகிழவெனைவாவென் றுவந்தெடுத்துண்மைஞானம் ... *
ஈதுசிவயோகநெறி யீதுவீடிதுபரம துரியமீதெனவுணர்த்தி ... ... *
எக்காலுமழியாத சித்திநிலையுந்தந்தி ரக்ஷிக்கில்வெகுபுண்யமாம் ... ... *
காதிலணிசங்கணப் பாயரியும்வேரியங் கமலனுதியதேவருங் ... ... *
கண்டுமலர்கொண்டுபணி கண்டுமொழிகெண்டையங் கண்ணிகாமாக்ஷிசூக்ஷி ... *
மாதரசியருண்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (ருகூ)

ஓங்காரபிரணவப் பாங்கானமண்டபத் துள்ளாயிலங்குமுமையே... ... *
உற்றபரிசுத்தமறை யத்தமெனமெய்த்தவர்க ளோதுமெய்ஞ்ஞானவாழ்வே ... *
றீங்காரியாங்கார வைம்புலப்பகைகளைமிகநீட நீக்கிவிடுசித்யசீலி ... *
நிகளநிகர்பாசபந் தத்தனையவிழ்த்தடியர் நின்றேத்துசுகுணசாலி ... ... *
றீங்காரசெனனத் தழுத்தாதெடுத்தா டிகம்பரிசகம்பரிக்குஞ் ... *
சிவபாரிநவகாரி தவவாரிபவசூரி சேமயவிமகிரிகுமாரி ... ... ... *
வாங்காதவுயர்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (சுo)

ஔவியமழுக்கா றவாவெகுளியிவையொழித் தான்மபோதத்தைநாடி ... *
யாவரணவிக்ஷேப மாதிகூறுகள்களைந் தத்துவிதசுத்தமேவி ... ... ... *
எவ்வமறுதிரிபதார்த் தத்துண்மைதேர்ந்திகத் திச்சைதனையொருவிமேலா ... *
மிச்சையையுநீங்கிநிற் றரிசனானந்தமுறு மியல்பதொன்றேனுமறியேன்... ...*
பௌவநிகர்சனனவா தைகளகலநின்னருட் பண்புநான்பெறுவதென்றோ ... *
பங்கயாசனனுதி தேவர்தொழுசிங்காரி பத்தரக்ஷகிகடாக்ஷி ... ... ...*
மௌவலணிகுழன்மூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௬௧)

நத்திவிசுவாசமாய் நம்புமுன்னடியவனை நானில்மெலாமறியவே ... ... *
நன்மகனெனப்பெயர் தரித்துவாவென்றுசொலி நன்கழைத்துண்மைகூறிச் ...*
சத்திதிரிபுரைகௌரி சங்கரிப்புராந்தகி சகஸ்ரதளபுஷ்பாசனி ... ... *
தாண்டவாடம்பரி சடக்ஷரியெனத்தொழுஞ் சத்யபுத்தியுமளித்து ... ... *
முத்திநிலையெய்திடு முபாயமுமளித்தென்னை முற்றிலுமிரக்ஷிகண்டாய் ... *
முக்காலநிகழ்வனவு மெக்காலுமுணர்கின்ற முத்தர்தொழுநித்யவாழ்வே ... *
மத்தமுடியத்தன்மகிழ் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௬௨)

நம்பிவிசுவாசமா யெண்ணித்துதித்துங்க ணாட்டத்தினாட்டம்வைத்து ... ... *
நாளுமடர்கோளிரிய நிற்கும்வகையோர்கிலே னுண்மலர்ச்சிலைவின்மாரன் ... *
அம்பைக்கடிந்துசிவ யோகுபுரிபவர்கடிரு வணிமலர்த்திருவடித்தாள் ... *
அவையாயினுஞ்சிரத் தேற்றுமறியேனெங்ங னருளினுக்காளாகுவேன் ... *
வம்புகுடிகொண்டமணி மலர்மங்கையிருவர்தொழு மாதரியுதாரிவீரி ... ... *
வரரமரர்நரருரக ரரகரவென்றொலிகொடுன் மலரடிவணங்கவாய்ந்த ... *
வம்பல்பரவும்புகழ்க் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ...(௬௩)

நம்பியனுதினமுமுள நெக்குநெக்காயுருகி நானுனைக்கூவிநின்றேன் ... ... *
நாதநாதாந்தியே வேதவேதாந்தியே நாடுதற்கரியவாழ்வே ... ... *
தும்பிமுகனைக்கந் தனைத்தந்தெனைத்தந்த சோதியேதுவாதசாந்தத் ... ... *
துய்யமதியினில்வளரு மன்னமேகற்பகச் சோலையேதுதிவாலையே ... ... *
வெம்பிமனமருளாம லென்மனக்குறையகல மேவிவந்தருள்புரிகுவாய்... ...*
விண்ணேயவ்விண்ணில்வரு காலங்கிபுனல்பார தாய்விரிந்திலகும்விமலி ... *
வம்புசெய்யாமலருள் குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (௬௪)

மைவிழியுநெற்றியிற் றிலகசிந்தூரமும் வாளியுடனோலைமுருகு ... ... *
மணிச்சந்த்ரஹாரமும் வயிரப்பதக்கமும் மருங்கிலணிபட்டாடையும் ... *
தைமிட்டசவ்வாது கமகமெனவாடைவரு தாளினிற்பொற்றண்டையுஞ் ... *
சதுமறைகளொலிசிலம் பதுகலிர்கலீரெனத் தாந்தமெனநிர்த்தமிட்டுக் ... *

கையிலகுமான்மழு கபாலசூலமுமுடைய கணவனுடனீமுன்வந்தென்... ...*
கவலைதனைநீக்கியடர்காலனெனையணுகாது காத்திரக்ஷித்தாளுவாய் ... *
வையகமதிக்கவரு குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (சுரு)

மாலயன்காணொணு மலரடிமுடிக்கடவுண் மதிமிலைச்சியவானவன் ... *
மறைமுனிவரமரர்சிவ யோகியர்க்கானந்த வாழ்வளித்தோங்குமெம்மான் ... *
காலனையுதைத்துவெங் காமனைவதைத்தொனுர் காவுல்செய்புரஞ்சிதைத்துக் ...*
கைலாயமுதலதல மெங்கெங்குமகிழவொரு காறுக்கியேநடித்தோன் ... *
நீலவிழிமந்தா கினிச்சடிலனெழில்பாக நீயேகவர்ந்தனையெனு ... ... *
நீள்கலைகளோதுஞ் சமர்த்தியடியேனெஞ்சி னின்றெனக்கருள்புரிகுவாய் ... *
வாலைதிரிபுவாபுவனே குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (சுசு)

மண்ணுலகும்விண்ணுலகு மெவ்வுலகுமிருவினை வசத்தினுல்வந்துவந்து ... *
மாய்வதல்லாதுனது மலரடித்தாமரை வழுத்துநலனுறுவசிலவாம் ... ... *
விண்ணுல்வுமின்னனைய தேகாதிமெய்யென விரும்பிநின்றவர்கள்பலவாம் *
இவையிரண்டுங்கெட்ட வேழைக்கொராதரவுன் னிணையடியையன்றியுண்டோ *
கண்ணுண்மணியாய்நின்ற காரணகடாக்ஷநற் கருணைவைத்தாண்டருளுவாய் *
கலைவலவருளமலரி னிலவுபரிபுரசரணி கவினிமாசலகுமாரி ... ... ...*
வண்ணநன்மணிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (சுஎ)

மனமதுவிருத்திகொண் டலைகின்றதான்மாயை வந்துநானென்றுநின்று ... *
வாதிக்குதேமடி தனைப்பிடித்தீர்த்துவெவ் வழக்கிட்டுறுக்கியுலகிற் ... *
சனனமரணக்கயிற் ருட்டுதேபொல்லாத சஞ்சலங்களையூட்டுதே ... ... *
தடிபோலமனமிறந் தானந்தவாரியிற் றற்போதமுங்கரைந்து ... *
தனதானதிமிதியெனு நடனவொலிகண்டுமகிழ் தருணமென்றருள்புரிகுவாய் ...*
சனகன்முதன்முனிவரர்க ளனவரதமுறுதிகொடு சாற்றுமெய்ஞ்ஞானவாழ்வே *
வனசநிகர்தருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... . (சுஅ)

மண்முமாயறிவுமாய் மாபூதவிந்திரியம் வாயுதன்மாத்திரைகளுமாய் ... *
மணிமந்த்ரவவுடதமு முச்சுடரினொளியுமாய் மாசிலாமணிவிளக்காய்த் ... *
தனதுமாமுறவுமாய்ச் சச்சிதாநந்தமாய்ச் சத்தியாய்ச்சிவமாகியுஞ் ... *
சரியல்லவென்றெண்ணி யுலகினைநடத்திவரு தன்மையினுமருவிநின்ருய் ... *
எனதுமனமலையாது வெறுவெட்டவெளியா யிருக்குமெய்யறிவுமீந்தாய் ... *
இல்லறந்தனினின்று நீதியினடத்திவரு மியல்புமென்மேலளித்தாய் ... ... *
வனசகன்னியர்போற்று குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (சுகூ)

சின்மயபராபர நிராமயசிதாகாச சித்தாயசித்தின்மூலையாய்ச்... ... *
செகசாலவித்தைக ளனந்தம்வகைவகையாய்ச் செருக்கிவிளையாடுபவளாய்த் *
தன்மயப்படியே நடாத்திமகிழ்தருசீலி சரணபங்கயமளித்தென் ... ... *
சத்துருவினுற்பில்லி சூன்யமுதல்வினைவிடத் தள்ளிநல்லின்புமுதவி ... *
உன்மயமெனத்தெளிந் திடமனக்கண்டகந் தகாந்தவனைகீர்த்திதந்தே ... *
உற்றமாதவவாணர் பத்திபுரிமுத்தமே யோங்குபரிசுத்தவித்தே... ... ...*
வன்மணியதாமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (எ0)

சிங்கென்றுனிருபாத மலரையநுதினமுமெய்ச் சிந்தைதனிலெண்ணுமடியார் ... *
தீதானவிருவினையும் வெந்துபரிபாகவரு டேக்கின்மலமதாகும் ... ... *
அங்கென்றழுத்திப் பதித்திடிற்கடல்சூழு மலகில்புவனங்களெல்லாம் ... ...*
அடங்கியுமொடுங்கியே யஞ்சலித்தெதிரினின் றுடுவதுமுண்மையாமால் ... *
வங்கென்றுவாங்கினு லங்கநோயொடுமோயை மலமும்விடுவதுமன்றியே... ... *
வசியமுதல்கன்மசித் திகளும்வந்தெய்துமணி மந்த்ரமிதுமதியுளார்க்கே ... *
மங்காதமணிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (எக)

வாலைதிரிபுரபுவனை யோங்காரிமாதரிவ ராகிருத்ராணிவாரி ... ... *
மருவுபார்முற்றுநின் னருளன்றியுள்ளவோ மணிமன்றமதனினின்றோர்... ... *
காலெடுத்தாடுநின் பாலலோசனனமரர் கதிரிரவிமதியமங்கி ... ... *
கயிலாயமாதிதல முழுதுமேதானுய்க் கலந்துங்கதிர்க்கற்றைசூழ் ... ... *
வேலனைக்கற்பகக் கன்றினையளித்தே விளங்குவதுநின்னதருளே... ... *
விண்ணவர்கள்மண்ணவர்க ளெண்ணரியவடியவர் விரும்பியதளிக்குமுதலே ...*
மாலயன்றொழுமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (எஉ)

கருத்தினிலுனிருபாத கமலம்பதித்தோங்கு கனவினிலுமரியநாமங் ... *
கருதுவதுமறவாம லாசூதிதந்தாளென்று காதலுடனேமகிழ்ந்து ... ... *
திருத்தமாயெண்ணித் துதித்துத்துதித்தெனது சிந்தையும்புண்ணுருதென்... ...*
செய்குவேனேழையான் வாடித்திகைத்துத் தியங்கிடவும்விடவொணுது ... *
தருத்துணர்க்காவே சரோருகப்பூவே சபாநாதனுடன்மகிழ்ந்து ... *
தாதாவெனச்சிறிய பாலனுன்வேண்டுவன தந்தாளநல்லதருணம் ... ... *
மருத்துமுதறுநிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (எங)

கருவிகரணுதியிந் தியவாள்கொள்காமாதி கடுபகைஞருலவுமோகக் ... ...*
காட்டினிற்றிரிமனச் சேட்டைக்குரங்கைநின் கணவனிடமொப்புவித்தம் ... *
மருவலரைஞானநிக ளம்பூட்டிநின்னடி மலர்ச்சிறைமில்வைத்துவாட்டி... ...*
வாதாடுபேயனேனை நித்தியானந்தசுக மாமனையில்வைத்தாளுவாய்... ... *

திரிபுராந்தகிமூவர் செய்தொழில்கள்முற்றுறச் சீரருடருந்தற்பரி ... *
செகதலமதிக்குமொரு மகிமைகண்மிகுத்தமெய்ச் செல்வியேநல்விசால ... *
மருவலர்ந்திடுமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (எச)

கன்மவினைதனிலகப் பட்டிடச்சனனக் கருக்குழியிறள்ளிவிட்டுக் ... *
காலவிடயத்தினிற் காவற்படுத்திமிகு கண்கலக்கப்படுத்தி ... ... *
வன்மவைராகம்வைத் தனதுதிருவடிபெறவு மார்க்கமுளமதியளித்து... ...*
வழுத்துஞானாநந்த வாழ்வுதருதேவிநீ வாளாவிருப்பதென்றும் ... ... *
தன்மமலவந்தெடுத் தாண்டருள்செய்தருணமிது சட்சமயமெய்த்தவத்தோர் *
தன்னறிவிலுன்னுமுய ரன்னநடையன்னையே சரணம்புயம்பணிந்து ... *
மன்மதன்றுதிமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (எரு)

கன்னியேசிற்பரம விண்ணினொளிதேசியே கழலளித்தெனையெடுத்துக்... ... *
கன்மந்துடைத்துநற் சன்மம்படைத்தெனைக் கருதும்வரமென்றருள்செய்வாய் *
வன்னிமாருத்திரன் மஹேஸ்வரசதாசிவன் வலப்பாலிடப்பாலதாய் ... *
வருமந்த்ரரூபமு மனுதியாய்நின்றநீ மறைநாலொடங்கமாறும் ... ... *
உன்னித்துதிக்கநல முயர்கின்றறீங்காரி யும்பர்தொழுமெழிலொய்யாரி ... *
உள்ளும்புறம்புமேல் சீழ்நடுப்பக்கங்க ளினுநின்றுலாவுவாமி ... ... ... *
மன்னுபுகழ்முதன்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (எசு)

காத்துப்படைத்தழிக் கின்றதொழின்மூன்றுநின் கருணையங்கண்மகிமையாங் *
கயிலாயமாதிதலம் யாவுமிலகுவதனது காக்ஷியின்றிறமையாமால் ... *
வேற்றுமையிலாதங்கர் கொங்கர்குச்சரர்மச்சர் மேவுகேரளரொட்டியர்... ...*
விதிமுறைதுதித்துமெய்த் தத்தங்கடெய்வமென மெச்சியேபணிபவர்க்கு ... *
நேர்த்தியாய்வேண்டுவ வளித்துவக்கின்றபர நிமலிநித்யானந்திநன் ... *
னீவிகுணசாலிசெக சாலிபுண்ணியசாலி நெறியளித்தென்னையாள்வாய் ... *
மாற்றுமிகுதங்கமே குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (எஎ)

பாராதருட்கடைக் கண்களாற்பஞ்சமா பாதகனெனக்கைவிடில் ... *
பர்த்தாமகாபாத கந்தவிர்த்தனரெனப் பகர்புகழ்க்கிகழ்வாகுமே ... ... *
வாராதிருந்திடவு நீதியுண்டோவென்னை வஞ்சிப்பதுந்தர்மமோ ... ...*
மடிபிடித்துன்னையம் முச்சந்திநடுவிலே வாவென்றுதானிழுப்பேன் ... *
தாராள்மாயுனது சந்நிதியில்வாதிடத் தகுமடிமைநானுதலால் ... ... *
தரணியுளபெரியோ ரறிந்திடவும்வந்தெனைச் சற்குணிதடுத்தாளுவாய் ... *
வாரார்சடைச்சியொளிர் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (எஅ)

கிட்டவரிதாயநின் மட்டணிமலர்ப்பதங் கிட்டிநானுய்வதென்றோ ... ... *
கிம்புருடருரகர்கந் தருவரரவொலிதனைக் கேட்டியான்மகிழ்வதென்றோ ... *
அட்டசித்திகண்முதற் ௬ழிலேதும்வேண்டிலே னடருமூவாசைவேண்டேன்...*
ஆகாமியஞ்சஞ்சி தம்பிராரத்துவ மடங்கலுந்தானொழித்துத் ... ... *
தட்டாதமெய்ப்பத்தி செய்துனதுநூபுரச் சரணபங்கயதரிசனத் ... ...*
தனிநிஷ்டைபெறவருள்செ யடியார்மனப்பிணி தவிர்த்தாளவல்லவுமையே... *
வட்டமனைநின்றிலகு குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (எக)

இள்ளைபோன்மொழிகுளறு மறிவிலாப்பிள்ளைமுதிர் கேள்வியொன்றேனுமில்லேன்
சிழாயவாங்கார முதலதுற்சங்கையைக் கிளறுமச்செயலுமில்லேற் ... *
குள்ளமேயம்பலம லாதுவேறிலையெனமு னுண்மையுபதேசித்தபின் ... ...*
ஒருவன்யானன்றுமுத லனலிட்டமெழுகுபோ லுருகிமனம்வாடியேங்கிக்... *
கள்ளவெம்பாசங்க டளையறுத்தெறியென்று கழறிமனநொந்தலுத்தேன் ...*
காதுபிணிநீக்கிநீங் காவடிமையாக்கிநற் கருணைவைத்தெனையளிப்பாய் ... *
வள்ளவிடம்வளர்மூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (அ0)

குருவுமாயறிவுமாய் நின்றஜெகசோதியே கோகனகமலரில்வாழ்வே ... *
கூற்றுவந்தடருமுனம் வந்தஞ்சலென்றெழில்கொள் குவலயமெலாமதிக்கத் ...*
தருவனையதண்ணருள்செ யெம்பிரானொடுசகல சமயங்கடோறுநின்று ... *
தாயாவருளளிக்குஞ் சடகூநரிமனோன்மணிசதானந்தயோகருன்னும் ... ...*
புருவநடுவணையிலே நின்றபரிபூரணி புராந்தகிசடாதரிவெறும் ... *
புல்லறிவையுடையயிவ னென்றெனையுவந்தாண்ட புதுமையென்சொல்வனம்மே*
மருமலர்க்குழன்மூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (அக)

குருவெனவுவந்தெனை யளித்திடிலுனக்கும்வெகு குறைவுவந்திடுமோசொலாய் *
கும்பிட்டனேகவித தெண்டனிட்டலறியே கூவுமொழிகேட்கவிலையோ ... *
இருளனையபாசபந் தச்சுழலிலுழலாம லிவ்வுலகெலாமறியவே ... ...*
இருபாதபத்மதரி சனமருள்செய்சமயமின் றிமயவர்கடொழுதெய்வமே ... *
மருமலர்சுகந்தாதி நின்சரணமலரின்மிசை மதியாலிறைத்துளத்தால் ... *
வந்தனையொடும்பத்தி செய்துநின்றுனதுபர மானந்தவாழ்வுபெறுவேன் ...*
வருமவுனமணிமூல குண்டலியனாதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (அஉ)

கோடிசூர்யோதயப் ப்ரபையானமேனியுங் குலவுமுழுமதிவதனமுங் ... *
குவலயத்தடியவர்க ளுய்யவருள்பொழியுநற் கோகனகமனையகண்ணும் ...*
தேடிவருவோர்கள்வினை யோடிவிடுமெய்ப்பயன் செய்யுநற்றிருவடிகளுஞ் *
சேவிப்பதற்குநான் முன்புநன்மாதவஞ் செய்ததென்னோவறிகிலேன் ... *

பாடிப்படிப்பவர்த நாவினின்றருமறைகள் பகரும்வித்யாடம்பரி ... *
பஞ்சகிருத்யந்தனி நடத்துதற்பரனிடப் பாகத்தில்வளரன்னமே ... ... *
வாடற்பெருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (அங)

சாந்தகுணமேருநீ சகலமுமளிக்குநீ சகமுழுதுமானவளுநீ ... ... *
சாக்ரமுதலாமவத் தைகடோறுமழியாத சச்சிதானந்தவலிநீ ... ... *
மாந்தளிர்ப்பட்டாடை குங்குமப்பொட்டுடன் மான்மழுச்சூலமிலக ... *
மதிமுடியணிந்தநீ சிங்கமதிலேறியே வந்தெனையழைத்தினருடா ... ... *
சேந்தபொற்பாதார விந்தசிங்காரிமா சிற்பராபரசத்தியே ... ... *
சிற்சபையினிர்த்தமிடு மத்தனிடமுற்றுவளர் சித்திதருசத்தியுமையே ... *
வாய்ந்தவருடருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே.. ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (அச)

தயவுவைத்தேகித்ய தாண்டவருநீயுமாய்ச் சகலவடியவருமெச்சத் ... ...*
தண்ணருள்கொடுத்தாள வரவேண்டுமென்னவுஞ் சதகம்யான்பாடிவந்தேன்... *
இயல்பாயினுந்திரி யினுந்தத்வமசிபத விதாவிதமிதென்னவோர்ந்தே ... *
ஏகபோகத்தினி லிருந்திடவுமெண்ணினே னெண்ணமென்வீணெண்ணமோ ...*
பயமகற்றிக்கனக பதமலரளித்துரிய பண்போங்குவரமுமருள்வாய் ... *
பதஞ்சலிவியாக்கிரம பாதமுனியிருவரும் பரவவளர்மெய்ச்செல்வமே... ...*
வயமிகுத்திடுமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (அரு)

நெற்றியிற்றிலகசிந் தூரமுமிலங்கவே நேர்விழியின்மையுமோங்க ... *
நினைப்பவர்களுள்ளத்தி னின்றருளும்வைபோக நித்தியானந்தவடிவே... ...*
பத்தியில்லேனரிய தவமிலேனின்னுடைய பாதாம்புயத்தைநாடிப் ... *
பாடிப்படிக்குநற் றிறமிலேன்றன்னையும் பாதுகாத்தருள்செய்குவாய்... ... *
சத்திதிரிபுரைகௌரி சாம்பவியுமாதேவி சங்கரிமனோன்மனியெழிற் ... *
சடக்ஷரிநவாக்ஷரி திரியாக்ஷரியேகாக்ஷரீ சாற்றுபஞ்சதசாக்ஷரி ... ... *
மத்தப்பிரமத்திரவ குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (அசா)

பட்டுடைதரித்துநவ ரத்னவணிபூண்டுமே பாதச்சதங்கைகொஞ்சப் ... *
பளபளத்தளதளென மொகுமொகெனவருமுஜித பல்லாண்டுமிகமுழங்கக் ... *
கட்டவருகாலன்வந் தணுகாமலோடிவா காதுவெம்பிணிகள்வாட்டக் ... *
கண்டுமனம்வாடாம லோடிவாவற்பரைக் கலவாதிருக்கமுன்வா ... ... *
கிட்டிவருதெவ்வர்க டுடுக்கிடவுமோடிவா கிஞ்சுகவிதழ்ச்சிகாரி ... *
கிருபாகடாக்ஷியுனை யன்றியொருதுணையுங் கிடைப்பதரிதரிதன்னையே ... *
வட்டநடுநின்றமணி குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (அஎ)

பத்திவைராக்கியம துற்றோர்களநுதினம் பரவவமர்தருசெல்வமே ... ... *
பண்ணவர்களெண்ணரிய தண்ணன்மலர்கொடுமறை பழிச்சவருடருவன்னமே *
சத்தியந்தவருத வித்வஜனர்தம்முளச் சங்கைதீர்த்தாள்குமாரி ... ... *
சட்சமயசித்தாந்த வுச்சிமிசைவளருமொரு தங்கமேயுயர்புங்கமே ... ...*
சித்திகட்காதார வஸ்துவேவருமெய்ச் சிதம்பரந்தன்னினின்ற ... ... *
செகசாலதேவியுன் சித்தமுமகிழ்ந்தெய்த்த சேய்முன்னம்வருவதென்றோ *
மத்தன்முடியத்தன்மகிழ் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (அஅ)

பாலனனுதினங் கூவித்துதிப்பதைப் பார்த்துநீயறியவிலையோ ... ...*
பண்புடன்னன்புடன் னின்புடன்றண்மலர்ப் பாதமதுதொழுமெனக்கு ... *
நீலவிழியார்மைய லாபாசவிதிகள்கெட நீக்கிநின்னுமாவளி ... ... ...*
நெறியினின்றறிவையறி யறிவுபெற்றற்புத நிலைத்திடுநலருளுதவுவாய் ... *
காலகாலனைமருவி யுலகெலாம்பெற்றமெய்க் கௌரிதிரிபுரசம்ஹாரி ... ... *
சனகசபைதனினடன மிடுபரமசுந்தரீ கற்பகக்களிறையீன்ற ... ... *
வாலபரமேஸ்வரீ குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (அகூ)

பாராமலின்னமுந் தாமசஞ்செய்திடிற் பதமலரையான்விடுவனோ ... ... *
பரதவித்தழுகுழவி தாயெடுத்தமுதூட்டு பான்மையுமறிந்ததிலையோ ... *
வாராதிருந்திடிற் சரியல்லவெங்குநிறை வாமிசிவகாமிநேமி ... ... ...*
வந்தெனதுகவலையற மாற்றிவிடில்வெகுபுண்ய மாமௌனசிவசுந்தரி ... *
தாரார்ந்தநவமணிப் ப்ரபைவீசுபணியணி சதானந்திஞானவல்லி ... ...*
தகையாக்கிமிகைபோக்கி வினைநீக்கிநாயினேன் றனைநோக்கியாளம்மணி ... *
வாராகமருவியருள் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (கூ0)

பிரணவப்பொருளாதி யலகில்கலையாகிப் ப்ரபஞ்சபேதாபேதமாம் ... ... *
பிரிவாகியங்கங்கு நின்றஜெகசோதியே பேசொணுமறைநுட்பமே ... *
அரனரியயன்செயம் முத்தொழிற்றுணையா யளித்தின்பமுதவியென்று ... *
மழியாதவஸ்துவாய்ச் சாட்சியின்னருளாகி யாதிமத்யாந்தமென்னுந் ... *
திரமருவுசெல்வியே யெண்ணுன்கறத்தையுஞ் சிதைவிலாதோம்பமுதமே ... *
சேயானவென்மனக் கவலையறமெய்ஞ்ஞான தீரதத்துவவசிகர ... ... *
வரமுதவுவெழின்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ... (கூக)

புத்திபூருவமாக நித்யமுநினைத்துப் புகழ்ந்திடாதோய்ந்திருக்கும் ... ... *
புல்லறிவையுடையனு னுமினுநின்னெழிலுறும் பொற்பதப்பிணைநம்பினேன் *
சத்தியையளித்தங்க சுத்தியையளித்துநின் சப்தவுருவதனையுண்ருந் ... ... *
தத்துவமளித்துதற் போதமுமளித்தரிய சரணயங்கயமளித்தாள்... ... *

சித்தராநுதிநமுமகிழ் செல்வமேபரசமய திமிரமறவெழுமிரவியே ... ... *
சிதைவின்மதியுடையசிவ னடியவர்தமிதயமாஞ் சினகரத்தமர்விளக்கே *
வத்துவெனவருமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கஉ)

புல்லறிவையுடையயா னுயினுநின்னிருபதம் போற்றித்துதித்தபடியால் ... *
பொற்கயிலைவாழ்கின்ற மூலகாரணிகடற் பூவுலகிலுளவரைக்கும் ... ... *
செல்வமதுகுறைவிலா தோங்கிநின்னடியர்மகிழ் சித்தங்களிக்கநல்கிச் ... *
சிவபுண்ணியங்கள்பல வாற்றிவருகவுமிகச் செயல்கள்விடுமந்தநாளில் ... *
மல்லலம்புவனமெங் கெங்குமகிழ்வெய்தமறை வாணர்கள்களிக்கவென்னை *
வாவென்றழைத்தங்க மலமாற்றியழியாத வாழ்வையுமளித்தாளுவாய்... ... *
வல்லியுமையேமூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (கங)

பூரணிகாரணி யாரணிதுரந்தரீ பொன்னம்பலத்தமர்ந்த ... ... *
பூதரீமாதரீ மாயன்மகிழ்சோதரீ புனிததிரிபுரசுந்தரீ ... ... ... *
நாரணிபஞ்சப்பி ரேதாசனீவேத நாதநாதாந்தமௌனி ... ... *
நளிர்கடலிலெழுமால பக்ஷணிசுலக்ஷணீ நவநாதசித்தர்பரவுங் ... ... *
கூரணிதருஞ்சூலி நீலிநற்குணசாலி குறியேழைபங்காளியென் ... *
குறையெலாநீக்கிநின் னறைமலர்க்கழலினிற் கூட்டிவாழ்விப்பதென்றோ ... *
வாரணக்கடவுண்மகிழ் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே... ...(கச)

பூலோககயிலாய மாகுஞ்சிதாகாச பொன்னம்பலந்தன்னிலே... ... ...*
பூசுரர்கண்மகிழுமன வரததாண்டவமூர்த்தி பூசிக்குமொருபிள்ளையே ... *
சாலோகசாமீப சாரூபசாயுச்ய சாதுர்விதவண்ணமான ... ... ...*
சற்குணீநிர்க்குணீ பற்குனனுமகிழவருள் சாம்பவிசிவசங்கரி ... ... *
நீலலோசனிசக மனித்யமாய்க்கண்டுமன நில்லாதலைந்துலையுதே ... ...*
நின்னையல்லாதிதை நிறுத்துபவரில்லையா னீயேவலிந்தாளுவாய் ... ... *
மாலூறிமகிழ்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... ...*
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (கரு)

முத்திசித்தியுநினது பாதமலர்நல்குமென முக்காலுமோதிநின்றேன் ... ...*
முதலெழுத்தோங்கார சத்திசிவசத்தியே முக்கோணமாகியென்றும் ... *
பத்திபுரிபவர்கள்வேண் டுவவளித்தருளுதவு பண்ணம்பணத்திவெற்றி ... *
பாலிக்குமதிகாரி யேழைபங்காளியிது பாரமோவுன்றனுக்குச் ... ... *
சத்தியிலையோவதுவு நீயேமனத்திலுறு சங்கடமெலாந்தவிர்த்துத் ... ...*
தனையவிவன்வாவென் றழைத்தென்மதியுற்றபொரு டந்தாண்டிரக்ஷிகண்டாய் *
வத்துவெனவளர்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ... (கசு)

முத்திவரநல்கியிட நால்வேதமோதிவரு முதலெழுத்தானபரையே ... ... *
மூதண்டமுட்டியெழு சுழிமுனையிலெநடன முக்கணனுடன்புரிதருஞ் ... *
சத்தியேபிரமஞ் சதாசிவப்பொருளுமாய்ச் சச்சிதாநந்தமயமாய்ச் ... ... *
சாமுண்டியுருவமாய் மாகாளிவடிவமாய்ச் சஞ்சரித்துலகமெல்லாஞ் ... *
சித்தியுமளித்தெம் மனோர்மனத்துற்றவெந் திமிரமுமகற்றிவிட்ட ... *
சிங்காரியுனையன்றி வேறுதுணைகாண்கிலேன் திருவருளளித்தாளுவாய் ... *
வத்துவாயமர்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௯எ)

வித்தாயமாயா ப்ரபஞ்சத்தமுந்தியுள மெத்தவுமலைந்தலுத்த ... ... *
விடலையென்றடியர்மகிழ் தரகொடியில்வந்துன் விளங்குமெய்க்கருணையீந்த ... *
சித்தாயதேவியே செகசாலவாமியே சிறியனேன்மகிழாவியே ... ... *
சின்மயானந்தியே யெனையின்னமுள்ளந் திகைக்கவிடலாமோசொலாய் ...*
பத்திசெயவைத்தநீ முத்திவிலையோடினருள் பாலிப்பதென்றுதாயே ... *
பாடிப்படித்துருகி நாத்தமுதமுத்துமெய்ப் பரவசங்கொள்வதென்று... ... *
வத்தனைபெறும்மூல குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௯அ)

ஓதித்துதித்தென் மனக்குறையெலாஞ்சொலியு னுளமுவந்தருள்வதென்றோ ... *
உற்றசிவசத்தியுன் சித்திபெற்றருகினி லுவந்திருந்தருள்வதென்றோ ... *
ஓதித்துதிக்குமிப் பிள்ளையின்பரிதாப மோர்ந்தருள்கொழிப்பதென்றோ ... *
உம்பர்தொழுமம்பிகை சிதம்பரிசகஸ்ரதள முற்றிடுசமஸ்தநாமி ... *
ஓதினேன்சதகமொன் றகமகிழ்ந்தேற்றடிய ருள்ளங்களித்துவக்க ... ... *
வோங்காரியருள்செய்து பாங்கானபதமலரு முத்தமியளித்தாளுவாய்... ...*
மாதிரமெலாமகிழ்செய் குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... (௯௯)

வெகுதேசம்வெகுபிறவி மெத்தவுமெடுத்துள மெலிந்தறவும்வாடுகின்றேன் ... *
மேவிட்டவின்பதுன் பங்களிற்றெருக்கிவெகு வேடிக்கைகண்டுநின்றேன் ... *
இஃதுமுன்னருளன்றி வேறிலையெனக்கவிக ளேழைமதியாலிசைத்தேன் ... *
எங்குநிறைகின்றபர மானந்தியொப்பமிட் டென்சனனமீடேற்றுவாய் ... *
தகுதியீதிச்சனன மதனிலேயுன்றனிரு தாளிணையைநோக்குதற்குத் ... ... *
தனிநின்றிரங்குகின் றேன்வறியனென்செய்வேன் தருணமிதுதருணமருள்வாய் *
மகமுனிவர்தொழுதேத்து குண்டலியனுதியே மாதங்கிமாறங்கியே ... ... *
மகிழ்சைவமுயர்திருத் தில்லையம்பலமேவு வாலசிவகாமியுமையே ... ...(௧௦௦)

அருந்தமிழிலக்கண விலக்யவக்ராதிக ளறிந்தகவிவாணர்முன்னம் ... *
அன்பினாலடியே னுரைக்குமிச்சதகத்தி லானகுற்றங்கணிக்கி ... ... *
மருந்தெனமகிழ்ந்தொப்ப மிடுவார்களறிவிலா வறிஞரவதூறசொல்லில்... ...*
வருவதென்னருள்வாமி தில்லைமூவாயிரர் வழுத்துசிவகாமிநேமி ... *

குருந்தடியிருந்துதிரு வாதவூரர்க்கருள் கொடுத்தவெம்பரமன்மகிழும் ... *
கோதில்சிவயோகாம் பிகைக்கண்மணிமறையினுளை கொண்டுலவுகின்றவல்லி... *
பரிந்தருள்கொழித்தநுக் கிரகமதுபாலித்த பான்மையாலீதுரைத்தேன் ... ... *
பண்ணவரும்விண்ணவரும் மண்ணவருமொத்துமெய்ப் பாலனையுவந்திடுகவே *

---

# தில்லைச் சிவகாம சுந்தரி சதகம்

முற்றுப்பெற்றது.

---

இஃது.

## மு. துரைசுவாமிக்கவிராயர்

பாடியது.

---

நேரிசைவெண்பா.

செந்திருவாழ் தில்லைச் சிவகாம சுந்தரியை ... ... *
வந்தனைசெய் யுஞ்சதகம் வாழ்கவதைப் - பைந்தமிழால் ... ... *
சொற்றநாகை யையாத் துரைஞானி வாழ்கநிதங் ... ... *
கற்றுரைப்போர் வாழ்கவென்றுங் காண் ... ... ... *